பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 10 மார்ச் 2018 | விதி : 91



புதுவிதி பரிசுப்
போட்டியில் வெற்றி
பெற்றோர் விவரம்




மங்கையர் ஆளுமை
ஒளிவிட்ட
தமிழீழப் போராட்டம்



அதிகார பீடங்களை
அதிர வைத்த
அருந்ததி ராய்



சொந்தக் காலில்
நிமிர்ந்து நிற்கும்
பெண்கள்




‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’





தமிழில் தற்போது அதிக படங்கள் வைத்திருப்பவர் வரலட்சுமி சரத்குமார். அவர் வசம் 10 படங்கள் இருக்கின்றன.

முன்னணி நடிகர்களு டனும் ஜோடி சேர்ந்து நடிக்கிறார். இதில் வித்தியாச மான கதா பாத்திரங்களும் உள்ளன.

விஜயை முருகதாஸ் இயக்கும் படத்திலும் முக்கிய பாத்திரத்தில் வரலட்சுமி நடிக்கிறார்.



நயன்தாராவுக்கு ‘அறம்’ படம் எப்படிப் பெயரும் புகழும் பெற்றுக் கொடுத்ததோ அதே போன்று சாய் பல்லவிக்கு ‘கரு’ படம் அமையும் எனக் கூறியிருக்கிறார் இயக்குநர் விஜய்.

தமிழில் நல்ல படம் வழங்க வேண்டுமென நினைத்திருந்தமையாலேயே இவ்வளவு தாமதமாக அறிமுகமானேன் எனக் கூறியுள்ளார் சாய் பல்லவி.



கமல் - ஸ்ரீபிரியா நடிப்பில் 1979இல் வந்த படம் ‘நீயா’. இதன் 2 ஆம் பாகம் 39 ஆண்டுகளுக்குப் பிறகு, ‘நீயா 2’ என்ற பெயரில் புதிய பரிமாணத்தில் தயாராகிறது. இப்படத்தில் 22 அடி நீள இராட்சதப் பாம்பு இடம்பெறுகிறது.

இப்படத்தில் நாயகனாக ஜெய், நாயகிகளாக வரலட்சுமி, கேத்ரின் தெரசா, ராய்லட்சுமி நடிக்கின்றனர். பாம்பு பெண்ணாக வரலட்சுமி நடிக்கிறார்.

அமலா ஹோம் என்ற தொ
நிறுவனத்தைத் தொடங்கியுள
கண் தானம் பற்றிய விழிப்புண
நிதியைத் திரட்டுவதே இந்த
நோக்கம் என்கிறார் அவர்.
“நாம் அனைவரும் ஒன்றின
கண் பார்வையற்ற அனைவரு
கிடைக்கும்படி செய்து அழகா
வளர்ந்து வரும் நம் தேசத்தை
காண லை
கூறியுள்

‘ஊமை விழிகள்’ என்ற படத்தில் நடிக்கவுள்ளார் பிரபுதேவா. படத்தை அறிமுக இயக்குநர் ஆகாஷ் ராம் இயக்கவுள்ளார்.

படத்தின் நாயகியாக மம்தா மோகன் தாஸ் ஒப்பந்தமாகியுள்ளார். 6 ஆண்டுகளின் பின்னர் தமிழ்ப் படத்தில் அவர் நடிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஷாலுடன் சிவப்பதிகாரம், மாதவனுடன் குரு என் ஆளு படங்களில் அவர் நடித்துள்ளமை நினைவில் கொள்ளத்தக்கது.



# மங்கையர் ஆளுமை ஒளிவிட்ட
# தமிழீழ விடுதலைப் போராட்டம்

■ நா.ரா.



இளம் தமிழ் பெண்கள் என்றால் முழுப்பாவாடை, அரைச்சேலை, மென்நடை, நாணம் கலந்த விழிகள், நெற்றியில் ஒரு ஒட்டுப்போட்டு, கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலி, மல்லிகை மாலை சூடிய நீண்ட பின்னல் என ஒரு அழகிய தோற்றம் தான் மனதில் வரும்.

1985 இன் இறுதிப் பகுதியில் ஜீன்ஸ், ஆண்களணியும் சேர்ட், இடுப்பில் ஒரு பட்டி, இரட்டைப் பின்னலிட்டு வளையம்போல் மடித்துக் கட்டப்பட்ட கூந்தல், நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை இப்படியான தோற்றத்துடன் சில இளம் பெண்கள் சைக்கிளில் செல்வதைக் காணமுடிந்தது.

அவர்களைக் கண்டு எமது மக்கள் அதிசயிக்கவில்லை! அன்போடு நோக்கினார்கள், ஒரு நேர உணவாவது கொடுத்து மகிழ வேண்டுமெனத் துடித்தார்கள். ஏனெனில் எமது மக்கள் தோளில் துப்பாக்கி ஏந்திய அந்த இளம் மங்கையர்கள் அடிமைப்பட்டுக் கிடந்த எமது மண்ணையும் மக்களையும் விடுவிக்கப் புறப்பட்ட மீட்பர்கள் என்பதை அறிவார்கள். சுதந்திரப் பறவைகளாகச் சிறகடிக்கும் அவர்களை எமது மக்கள் அனைவரும் தங்கள் சொந்தப் பிள்ளைகளாகவே உரிமை கொண்டாடினார்கள்.



இந்தியாவில் பயிற்சி பெற்று வந்த பெண்போராளிகள் சந்தித்த முதற்களம் மன்னார். அவர்களைச் சுற்றி வளைக்க வந்த படையினரை ஒருபுறம் பரப்புக்கடந்தானிலும், மறுபுறம் அடம்பனினும் அவர்கள் வழிமறித்துத் தாக்குகின்றனர். தளபதி விக்ரரின் தலைமையிலான அணி படையினரைப் பின்புறமாகத் தாக்குகிறது. உள்ளும் புறமும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் தள்ளாடிக்குள் பின்வாங்கி விடுகிறது. இரு படையினர் உயிருடன் பிடிக்கப்படுகின்றனர். பல இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்படுகின்றன.

எனினும் இந்த வெற்றித் தாக்கு தலில் மன்னார் மாவட்டத் தளபதி விக்ரர் வீரச்சாவடைகிறார்.

இப்படித்தான் இட்ட அடி நோக எடுத்த அடி கொப்புளிக்க வட்டில் சுமந்த எமது பெண்கள் எதிரிகள் கண்ணில்பட்ட இடமெல்லாம் சுடுகலன் ஏந்திக் களமாடிச் சாதனை படைத்தார்கள்.

காலப் போக்கில் மகளிர் அணி விரிவடைந்தது. மாலதி படையணி, சோதியா படையணி என இரு பெரும் படையணிகளாக மாறியது. தளபதிகள், படையணித் தலைவிகள், சிற்றணிகளின் தலைவிகள், குழுத் தலைவிகள், வேவு அணியினர், கரும்புலிகள் எனப் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுச் சாதனை படைத்தனர்.

பெண்ணடிமை என்ற பேச்சே காணாமற் போனது, ஆண் அணிகளுக்கு நிகராக திட்டமிடவும், படையணிகளை வழிநடத்தவும், உடனுக்குடன் முடிவுகளை எடுத்துத் தாக்குதல் வியூகங்களை வகுக்கவும் பெண்களால் முடியும் என்பதை செயற்படுத்த ஆரம்பித்தனர்.

போர்க் களங்களில் எமது பெண்கள் வெற்றிமேல் வெற்றி களைக் குவித்து ஆணுக்குப் பெண் நிகரென்று சங்கு முழங்கினர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் களங்களில் சாதனை படைக்கும் வீராங்கனைகளை உருவாக்குவதில் சாதனை படைத்தது போன்றே நிர்வாக சேவையினர், நிதி, நீதி வல்லுனர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், பொருளா தார உற்பத்தி வல்லுனர்கள், ஊடகவியலாளர்கள், கலை இலக்கியவாதிகள், புலனாய்வாளர்கள் எனப் பல முனைகளிலும் எங்கள் பெண்களின் ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொண்டு வந்து தமிழீழ நிழல் அரசில் பெண்களும், முக்கிய பாத்திரம் வகிக்கும் வரலாற்றை உருவாக்கியது.

மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி போன்ற அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு குறுகிய காலப் பயிற்சியிலேயே மருத்துவர்கள், தாதியர்கள், நீதியாளர்கள், சட்டவாளர்கள் போன்ற பெரும் பொறுப்பு வகிக்கும் பெண்கள் உருவாக்கப்பட்டனர். சுதந்திரப் பறவைகள் என்ற பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிடுமளவுக்கு ஊடகவியலாளர்கள், இலக்கிய வாதிகள் உருவாக்கப்பட்டனர். வானொலி - தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் பிரதி எழுத்தாளராக, நெறியாளராக, நடிகைகளாக, இசையாளர்களாக, தொழில்நுட்ப வல்லுனர்களாக எமது மங்கையர் புகழ் பெற்று விளங்கினர்.

முதலில் அரசியல் நிர்வாக, கலை இலக்கிய, மருத்துவ, நீதித்துறைகளில் இறங்க எமது பெண்கள் தயங்கிய போது தலைவர் ஒரு சில வார்த்தை களிலேயே அவர்களுக்கு வழிகாட்டினார்.


“நீங்கள் களமாடும் கனவுகளுடன் விடுதலைப் போராளிகளானீர்கள் என்பதை நானறிவேன். மக்களுக்குத் தொண்டு செய்வதும் போரின் ஒரு பகுதிதான். விடுதலைக்காக மக்கள் என நினைத்தீர்களானால் நீங்கள் தோல்வியடைவீர்கள். மக்களுக் காக விடுதலை என நினைத்துச் செயற்படுவீர்களானால் நீங்கள் பொறுப்பேற்கும் ஒவ்வொரு பணிகளிலும் வெற்றி பெறுவீர்கள்.”

மக்கள் மத்தியில் பணியாற்றிய பெண் போராளிகள் மத்தியில் இது ஒரு மந்திரமாக வேலை செய்தது. அதன் காரணமாக களவு, கொள்ளை, காடைத்தனம், பாலியல் வல்லுறவு இல்லாத ஒரு சமுதாயத்தை அவர்களால் உருவாக்க முடிந்தது.

களமேறிப் போராடாமலே, இந்திய இராணுவத்துடன் உணவுதவிர்ப்பு போராட்டத்தின் மூலம் போராடி உயிர்நீத்த அன்னை பூபதி என்ற மகத்தான அன்னையை உருவாக்கியதும் தமிழீழ விடுதலைப் போராட்டமே.

உலகையே வியக்கவைத்த எமது விடுதலைப் போராட்டமும், அந்த விடுதலைப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராக மேலெழுந்த எமது பெண்களின் வீரம், தியாகம், நிர்வாக ஆற்றல் என்பனவும் துரதிஷ்டவசமாக முள்ளிவாய்க்காலுடன் மௌனிக் கப்பட்டுவிட்டன என்பது உண்மைதான்.

ஆனால், வித்துக்கள் அழிவதில்லை. அவை மீண்டும் முளை விடும். •



# இந்திய சினிமாவில் பெண்ணடிமை

இந்தியாவில் சினிமா என்பது ஒரு மனமகிழ் கலை என்பதற்கு அப்பால், மக்களின் சிந்தனைப் போக்கை வடிவமைப்பதிலும், கனவுலக நாயக, நாயகிகளை உருவாக்கி , அவர்களை வழிபாட்டுக்குரியவர்களாக மாற்றுவதிலும், அரசியல்வாதிகளையும், தலைவர்களையும் தயாரித்து ஆட்சிப்பீடம் ஏற்றுவதிலும் பிரதான பங்கு வகித்து வருகின்றது.

அவ்வகையில் நாரக்கீஸ், வைஜந்திமாலா, குஷ்பு, ஜெயலலிதா போன்றவர்கள் சினிமா உருவாக்கிய பிம்பம் மூலம், அரசியலுக்கு வந்தாலும்கூட, அப் பெண்கள் சினிமாவை ஓர் அரசியல் ஆயுதமாகவோ, பெண்ணடிமைத்தனத்துக்கு எதிரான ஒரு போர்க்களமாகவோ பாவிக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. இவர்கள் அரசியலில்கூட ஆணாதிக்க சமூகத்தின் பணிகளை நிறைவேற்றுபவர்களாகச் செயற்பட முடிந்ததேயொழிய, அவர்களால் பெண்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராக எதையும் செய்துவிட முடியவில்லை.

எனினும் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும், பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான சில படைப்புகள் வெளிவரத்தான் செய்தன. இதில் ஹிந்தியில் வெளிவந்த தீபா மெஷ்ராவின் “பையர்” (நெருப்பு), தமிழில் வெளிவந்த தங்கர்பாச்சானின் “அழகி” என்பன குறிப்பிடத்தக்கவையாகும். சுஜாதாவின் நடிப்பில் வெளிவந்த “விதி” என்ற படம் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிப் பேசினாலும், முழுமையான பெண்களின் போர்க்குரலாக அமையவில்லை.

பையர் படம் தயாரிக்கப்பட்டு, 1996 இல் வெளிநாட்டில் வெளியிடப்பட்ட போதிலும், இந்தியாவின் இந்துத்துவ பிற்போக்கு சக்திகளின் பலத்த எதிர்ப்பு காரணமாக 1998இலேயே வெளியிட முடிந்தது. அப்பொழுதும் கூட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டும், திரையரங்குகள் அடித்து நொறுக்கப்பட்டும், வழக்குகள் தொடுக்கப்பட்டும் பல இடையூறுகள் மேற்கொள்ளப்பட்டன.

பெண்களின் அன்பு, பாலியல் தேவை என்பவற்றை பொருட்படுத்தாத இரு கணவன்மாரின் மனைவியர் பரஸ்பரம் ஒருவர்மேல் ஒருவர் அன்பு செலுத்துவதும், தங்கள் பாலியல் தேவைகளுக்காக தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவதும், அது கணவன்மாருக்கு தெரியவரும்போது , உயிருடன் பெண் எரிவதைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற கொடுமைகளுக்கு உட்படுத்தப்படும் நிலைமையில் , அவர்கள் இருவருமே வீட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

இப்படம் இந்திய கலாசாரத்தை கீழ்மைப்படுத்துவதாகக் கூறி நாடு பரந்த எதிர்ப்பு கிளப்பப்பட்ட போதிலும்,







பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி அவர்கள் அக்கறைப்படவில்லை. இதன் நெறியாளர் தீபா பெஷ்ரா, நடித்த சாப்னா ஆஷ்மி, நந்திதாதாஸ் ஆகியோருக்கு கொலை அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. அவர்கள் மூவரும் ஏற்கனவே பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள், சுற்றுச்சூழல் மாசுபடுத்தலுக்கு எதிரான போராட்டங்கள் என்பவற்றில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் என்ற காரணத்தால் அசைந்து கொடுக்கவில்லை. ஷப்னா ஏற்கனவே மதத்தின் பேரால் பெண்களுக்கு இழைக்கப்படும் கண்ணுக்குத் தெரியாத அநீதிகளைக் கண்டித்து, வெளிவந்த “ஹரே கிருஷ்ணா ஹரே ராம்” படத்தில் நடித்தமைக்காக பெரும் எதிர்ப்புகளை எதிர்கொண்டவர். நந்திதா தாஸ் “ கன்னத்தில் முத்தமிட்டால்” என்ற படத்தில் விடுதலைப் புலிப் போராளியாக நடித்தவர்.

அதேபோன்று இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆயுதப் போராளியாக சாதனை படைத்த கல்பனா தத்தின் வீர வரலாறு 2010 இல் வெளிவந்தபோது, தீபிகா படுகோன் நடித்திருந்தார். அவருக்கும் பலத்த எதிர்ப்பு காட்டப்பட்டது. அச் சமயம் ஆண்களுக்குச் சமனான வீரமங்கையாக விளங்கிய ராஜபுத்திர அரசி பத்மாவதியின் படத்திலும் தீபிகா நடித்தமைக்கு பலத்த எதிர்ப்புக் காட்டப்பட்டது.

இந்தி சினிமா உலகில் ஷப்னா ஆஷ்மி, நந்திதாதாஸ், தீபிகா படுகொன் வித்தியாபாலன் போன்ற நடிகைகள் பெண் ஒடுக்குமுறை சுற்றுச்சூழல் மாசு, மனித உரிமை மீறல் என்பனவற்றுக்கு எதிரான திரைப்படங்களில், எதிர்ப்புக்களையும் மீறி நடித்து வருவதுடன், சொந்த வாழ்விலும், அப்பிரச்சினைகள் தொடர்பான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் இந்திய சினிமா உலகம் அவர்களை வெறும் கவர்ச்சிக் கன்னி களாகவும், ஒழுங்கற்றவர் களாகவும் சித்திரித்து கேவலப்படுத்தும் வகையில் செயற்படுகின்றது.

“கருத்தம்மா” பெண்ணடி மைத்தனம் , பெண் சிசுக் கொலை என்பவற்றுக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் படைப்பு. ஆனால் இந்துத்துவ பிற்போக்கு சக்திகள் திட்டமிட்டு அப் படத்தை வர்த்தகரீதியில் தோல்வியடைய வைத்தனர். பாரதிராஜாவின் புகழாலகூட அப் படத்தை வெற்றிபெற வைக்க முடியவில்லை. “வீரபாண்டிய கட்டப்பொம்மன்” படத்தில் வெள்ளையத்தேவன் போருக்குப் போகும்போது, போகாதே போகாதே என் கணவா” என்று புலம்பும் பெண்ணாக வெள்ளையம்மா சித்திரிக்கப்படுகிறாள். ஆனால் பாஞ்சாலக் குறிச்சியில் நிலவும் நாட்டார் பாடல்களிலும், தெருக்கூத்துக்களிலும் வெள்ளையம்மா கணவன் போரில் கொல்லப்பட்ட பின்பு ஆணுடை தரித்து, தன் கணவனை வஞ்சகமாகக் கொன்ற ஆங்கில படைத் தளபதியைக் கொன்று விட்டு வீரச்சாவடைகின்றாள். ஆனால் தமிழ்ச் சினிமா வியாபாரிகள் வெள்ளையம்மாவை அழுது புலம்பும் சராசரிப் பெண்ணாகவே காட்டி, பத்மினியின் கண்ணீரைக் காசாக்கியிருக்கின்றார்கள்.

தஞ்சையில் கூலிப்பெண்களை சாட்டையால் அடிப்பது, கள்ளிப்பால் கொடுத்து பெண் சிசுக்களைக் கொல்வது போன்ற பெண்களுக்கு எதிரான நிகழ்வுகளுக்கு எதிராக செங்கொடி ஏந்திப் போராட்டம் நடத்தியவர் மணியம்மை. மணலூர் மணியம்மை என்ற அழைக்கப்படும் இவ் வீராங்கனை செங்கொடியின் கீழ் விவசாயக் கூலிகளை அணிதிரட்டினார். சிலம்பம் கற்றுக் கொண்ட இவர், நிலப் பிரபுகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார். கையில் கம்புடன் கிராமம் கிராமமாகச் சென்று , விவசாயிகள் போராட்டத்துக்குத் தலைமை கொடுத்த அவளை, பண்ணையாளர்கள் காட்டுமானை ஏவிவிட்டுக் கொன்றனர். எந்தவொரு தமிழ்ப்பற்றுள்ள சினிமாக்காரனும் மணியம்மையின் வீர காவியத்தைப் படமாக்கவில்லை.

வட இந்தியாவிலும் சரி, தென்னிந்தியாவிலும் சரி, சில விரல்விட்டு எண்ணத்தக்க அளவில் , பெண்களின் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும், பெண்களின் பொதுவாழ்வுக்கான பங்களிப்பையும், வீரத்தையும் வெளிப்படுத்தும் வகையிலும், சில சினிமாப் படங்கள் வெளிவந்த போதிலும், அவை பெரும்பாலும் வர்த்தகரீதியில் தோல்வியடைகின்றன. அடிப்படையில் திட்டமிட்டுத் தோற்கடிக்கப்படுகின்றன. பெண்களை அச்சம், மடம், நாணம், பயிர்ப்புக் கொண்ட அமைதியான, ஒழுங்கான , குடும்பத்துக்குச் சேவைசெய்பவர்களாக

(18ஆம் பக்கம் பார்க்க)

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## கலவரங்களை உடன் நிறுத்துங்கள்!

ஒரு போரால் ஏற்பட்ட இரத்தமும் கண்ணீரும் காயும் முன்னரே - ரணங்களும் வலிகளும் ஆற முன்னரே இன்னொரு போருக்கு நாடு தயாராகி விட்டதா? என்ற அச்சம் எழுந்துள்ளது. சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம்கள் மீது பெரும்பான்மையினரான சிங்களவர்கள் இப்போது வன்முறைகளை தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இதேபோன்று 1956களிலும் தமிழினத்தின் மீதும் வன்முறைகள் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. காலத்துக் காலம் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் - கலவரங்கள் - அடக்குமுறைகள் - புறக்கணிப்புக்கள் - உரிமை மறுப்புக்களால் தமிழ் இளைஞர் யுவதிகள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதுவே தனிநாட்டுக் கோரிக்கைக்கும் காரணமாக அமைந்தது.

முப்பது வருடங்களுக்கு மேலாக நீடித்த போரில் தமிழர்களான நாம் சந்தித்த அழிவுகள்-இழப்புக்கள்- வலிகள்- துன்பங்கள் மிகமிக அதிகம். அந்த அழிவுகளையும் இழப்புகளையும் ஈடுசெய்யும் வகையற்றும், போரால் ஏற்பட்ட வலிகளையும் ரணங்களையும் ஆற்றும் வழியற்றும், போர் ஏற்படுத்திச் சென்ற சமூக, உளவியல் பிரச்சினைகளை தீர்க்கும் வழியற்றும் இன்றும் வீதிகளிலும் மரநிழல்களிலும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றது நம் இனம்.

தமிழின விடுதலைப் போரை இறுதிவரை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் ஒழுக்கமும்-மனிதாபிமானமும் நிறைந்து இருந்தமையால்தான் சிங்கள இனம் பெரும் அழிவுகளைச் சந்திக்கவில்லை. ஏனெனில் புலிகள் இராணுவத்துக்கும் அரசுக்கும் எதிராகவே போர் நடத்தினார்கள். சிங்கள மக்களை இலக்கு வைக்கவில்லை. அவர்களைக் கொல்லவும் இல்லை - சில சமயங்களில் புலிகளின் தாக்குதல்களில் சிங்கள மக்கள் அழிவுகளைச் சந்தித்தாலும் அது அவர்களை இலக்காகக் கொண்டிருக்கவில்லை. என்பதே உண்மை. ஏனெனில் புலிகள் மக்களை இலக்கு வைத்திருந்தால் அதனால் ஏற்படும் அழிவை சிங்கள இனம் இறுதிவரை ஈடுசெய்யமுடியாத அளவு பேரிழப்புகளைச் சந்தித்திருக்கும் என்பதை உலகறியும்.

ஆனால் இலங்கை - சர்வதேச சதிகளில் சிக்கி புலிகள் மௌனிக்கப்பட்டபோது, ஏற்பட்ட அழிவுகள்-இழப்புகள்- அவலங்கள் எந்த இனத்துக்கும் நேரக்கூடாதவை. சிறுபான்மைத் தமிழினத்தின் மீது நடத்தப்பட்ட போர் அவர்களை மேலும் சிறுபான்மை நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்த நிலையில் , எண்ணிக்கையில் வேகமாக அதிகரித்து வரும் மூன்றாவது சிறுபான்மையினரான முஸ்லிம்கள் மீது பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் பார்வை திரும்பியுள்ளது.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் பங்காளிகளாக இருந்தவர்கள் முஸ்லிம்கள் - அவர்களில் சிலர் இராணுவத்துக்கும் - அரசுக்கும் துணைபோய் தமிழர்களைக் கொன்றொழித்தாலும் - காட்டிக் கொடுத்தாலும் - மொழியாலும் உதிரத்தாலும் - மனிதத்தாலும் ஒன்றாகிப் போன நம் சகோதர இனத்தின்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள்- அடக்குமுறைகள்- அழிவுகள் - சூறையாடல்கள் உடன்நிறுத்தப்படவேண்டும், கண்டிக்கப்பட வேண்டும்.

முஸ்லிம்கள் மீதான வன்முறைகளை நிறுத்துங்கள்!
கலவரக்காரர்கள் மீது உடன் நடவடிக்கை எடுங்கள்!!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




மொத்தச் சனத்தொகையில் ஆண்களைவிட அதிகமாகக் காணப்படும் பெண்கள் பலத்தாலும், திறமையினாலும் வெளி உலகுக்கு அறியப்படாமலேயே நீண்ட காலமாக இருந்து வந்திருக்கின்றனர். விடுதலைப் போராட்டகாலத்திலேயே அவர்கள் திறமையும், பலமும் உலகுக்கு வெளிப்பட்டுக் கொண்டதெனலாம். தமிழ் பெண்களின் பலத்தையும், விவேகத்தையும் வெளிக் கொண்டு வந்ததில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. பெண்ணியத்தைப் பேசுவதைவிட்டு நடைமுறையில் சாத்தியப்படுத்திய பெருமை அவர்களையே சாரும். அதற்கு முன்பு பெண் விடுதலை பற்றிப் பேசப்பட்டாலும் அவையாவும் ஏட்டுச் சுரக்காயைப் போன்றே இருந்திருக்கிறது. அதை நடைமுறையில் சாத்தியப் படுத்துவதற்கான சூழல் தென்பட்டதில்லை. அதற்குக் காரணம் எமது சமூகக் கட்டுப்பாடுகளும், சமூகநடைமுறையும் என்பதே பலரது கணிப்பு. ஆண் ஆதிக்கச் சமூகமாக வளர்த்தெடுக்கப்பட்ட எமக்குப் பெண் விடுதலையை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனோ நிலை இருக்கவில்லை. இன்றும் பெண் விடுதலையை முழுமையாக ஏற்றுக் கொண்ட சமூகமாக நாம் இல்லை என்பதே உண்மை எனலாம். தற்போது அரசினால் சகல துறைகளுக்குமான பெண்களின் இட ஒதுக்கீடுகள் கட்டாய சட்டமாக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறையில் முழுமையாக சாத்தியப்படாததொன்றாகவே காணக்கிடக்கிறது.இதற்குப் பெண்களும் தமது மனோநிலையிலிருந்து விடுபட்டு வெளிவரத் தயங்குவதையும் பிறிதொரு காரணமெனலாம்.

போராட்ட காலத்திலேயே பல சமுக மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. பெண்கள் போர் நடவடிக்கைகளில் சேர்ந்துகொண்டனர், சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கென சகல துறைகளிலும் தனியான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. மகளிர் அமைப்புகளற்ற பொதுஅமைப்புக்களிலும், நிறுவனங்களிலும் அதிகமாப் பங்கெடுக்கத் தொடங்கினர். போர் நடைமுறைக்கு அப்பால் சென்று கல்வியிலும், விளையாட்டுக்களிலும், கலை, கலாசார நடவடிக்கைகளிலும், சமூக மேம்பாட்டுத் திட்டங்களிலும், அரசியலிலும் கணிசமான அளவு பங்கெடுத்துக் கொண்டனர். இயக்கம் கொண்ட பல வெற்றிகளின் முன்னோடிகளாகப் பெண்களே அறியப்பட்டிருப்பதுவும் எமது சமூகத்தில், பெண்களிடையே ஏற்பட்ட மன மாற்றத்தையும், மன எழுச்சியையும் எடுத்தியம்புகிறது.

போரில் பங்கெடுத்துக் கொண்ட முதல் பெண் மாவீராக இரண்டாம் லெப்டினன்ட் மாலதியும், முதல் பெண் அகிம்சைப் போராளியாக அன்னை பூபதியும், முதல் தளபதியாக மேஜர் சோதியாவும், முதல் கரும்புலி - கப்டன் அங்கயற்கண்ணியும், முதல் பிரிகேடியர்களாக - பிரிகேடியர் விதுஷாவும், பிரிகேடியர் துர்க்காவும் - விடுதலைப் புலிகள் அமைப்பில் வாழும்போதே பதவி நிலை வழங்கப்பட்ட "கேணல்" தளபதிகளாக இவர்கள் வரலாற்றில் எழுதப்பட்டிருக்கின்றனர்.

பயிற்சிகளுக் கூடாகவும், மேம்பாட்டுத் திட்டங்களினூடாகவும் தம்மைப் புடம்போட்டுக் கொண்டவர்கள் பலர், இன்று கலை இலக்கிய மேம்பாட்டாளர்களாகவும், அரசியல்வாதிகளாகவும், சுய முயற்சியாளர்களாகவும் மற்றும் சமூக சேகர்களாகவும் எமது சமூகத்தில் பரிணமிக்கின்றனர். எமது சமூகத்தில் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான முன்னோடிகளும் இவர்களே!

■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# ‘நீரின்றி அமையாது உலகு’



எப்படி நடந்தாலும் இன்னும் ஒரு இரவும் பகலும் வேணும், பெரிய றோட்டைக் கடக்க. ஆறு நாட்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறோம். இரவில் மூன்று மணி நேரத் தூக்கம். அதுகூடத் தூக்கத்துக்கு ஒதுக்கப்பட்ட நேரம் என்று சொல்ல முடியாது. அதிலும் அரை மணிநேரம் சென்றிக்காக விழித்திருக்க வேணும். மிஞ்சிய நேரத்தில்தான் தூக்கமும் ஓய்வும்.

இப்படியே இன்னும் ஆறு நாட்கள் செல்லும் படுவானுக்கு (படுவான்கரைக்கு) போய்ச்சேர. இதெல்லாம் இடையில் எந்த இடைஞ்சலோ பிரச்சினையோ வராமல் இருந்தால்தான். எதிர்பாராத விதமாக ஏதாவது கொழுவினால் (படைத்தரப்போடு சண்டை மூண்டால்) எல்லாமே குழம்பி விடும். பிறகு நிலைமை சீராக இரண்டு மூன்று வாரங்கள் கூடச் செல்லலாம். அந்தக் காலத்தில் முன்னுக்குப் போகவும் முடியாது. பின்னுக்கு வரவும் முடியாது. காட்டிற்குள்ளேயே நிற்க வேண்டியதுதான்.

‘நிற்க வேண்டியது’ என்பதைச் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் காட்டிற்குள் நிற்கும் நாட்களில் ஓரிடத்தில் நிலையாகவும் நிம்மதியாகவும் இருக்க முடியாது. எந்தப் பக்கத்தால் சுற்றி வளைக்கப்படுவோம், எந்தப் பக்கத்தில் படுத்திருந்து தாக்குவார்கள் என்று எந்த நேரமும் எதிரியைக் கவனித்துக் கொண்டேயிருக்க வேணும். எச்சரிக்கை. எச்சரிக்கை. இந்த எச்சரிக்கை உணர்வு ஏதோ ஒரு பதற்றம் உடம்பு முழுவதிலும் தொற்றிய மாதிரி தலை அனலாகக் கொதிக்கும்.

காட்டில் இப்படி நடக்கும்போது பசி வயிற்றில் எப்போதும் முடிவடையாமல் தகித்துக் கொண்டிருக்கிறது என்றால், தலைக்குள்ளே நெருப்புக் கொழுந்து விட்டெரியும். காட்டில் வயிறாரவும் வாய்க்கு ருசியாகவும் சாப்பிட முடியாது. இருப்பதைப் பகிர்வதும் கிடைப்பதை உண்பதுமே வாழ்க்கை. இதற்குள் எந்தப் பக்கத்திலிருந்து கரடியோ, யானையோ, சிறுத்தையோ வரும் என்றும் தெரியாது. அதைவிடப் பாம்புப் பிரச்சினை வேறுண்டு. கைதொடும் மரத்திலும் இருக்கும். காலடியிலும் கிடக்கும். படுக்கையிலும் பாதுகாப்புக்கு இருக்கும் சென்றியிலும் கூடப் பாம்புகள் படுத்திருக்கும். பாம்புக் கடிக்கு மருந்தும் இல்லை. கை வைத்தியத்துக்கு முதலுதவியாக சில மருந்துண்டு. அது பெருங்கடிக்கல்ல. ஒவ்வொரு பயணத்திலும் ஒருவரையே இருவரையோ பாம்புக்கடிக்குப் பலி கொடுத்துக் கொண்டேயிருக்கிறோம்.

பெரிய றோட்டை நெருங்குவதற்கு இன்னும் அரை மணி நேரம் இருந்தது. அரை மணி நேரம் நடந்தால், றோட்டுக்குக் கீழே ஐநூறு மீற்றர் தொலைவில் வியூகம் போடலாம். அதற்கு ஒரு நான்கு மணி நேரமாவது ஆகும். பெரிய றோட்டில் படையினரின் காப்பரண்களும் வீதி ரோந்துகளும் எப்போதும் இருக்கும். அவர்களும் எம்மை நோட்டம் விட்டபடியே இரகசிய வேட்டைக்குக் காத்திருப்பார்கள். இதற்குள்தான் நாங்கள் அவர்களை நோட்டம் பார்க்க வேணும். இப்படி றோட்டை நோட்டம் பார்த்து, அதைக் கிளியர் பண்ணுவதற்கு சிலவேளை இரண்டு நாட்கள் கூடச் செல்லும் எங்களுடைய நடமாட்டமோ அசுமாத்தமோ அவர்களுக்குத் தெரிந்து விட்டால் கதை அவ்வளவுதான். இரண்டு மூன்று வாரங்கள் கூடச் செல்லும் றோட்டைக் கடப்பதற்கு. அதற்கு மீண்டும் முதலில் இருந்தே வேவு பார்த்துக் காரியங்களைத் தொடங்க வேணும்.

சத்தம் சலாரில்லாமல் படுத்திருந்து, வழி பார்த்து, அசுமாத்தம் எதுவுமில்லை என்று சரியாக உறுதிப்படுத்திய பிறகுதான், முதலாவது அணி மெல்ல நகரும். முதல் அணியில் நான்கு பேர்தான். அந்த நான்கு பேரும் பாதுகாப்பாக அப்பால் போய்ச் சேர்ந்தால், உடனே அடுத்த அணி நகர்ந்து கடக்கும். அதில் இருபது பேருக்கு மேல் நகருவார்கள். அதுவும் பாதுகாப்பாக கடந்து விட்டால், தொடர்ந்து மூன்றாவது அணி. அதில் எப்படியும் முப்பது பேருக்கு மேலிருப்பார்கள். தொடர்ந்து நான்காவது அணி. அதில் எப்படியும் பதினைந்து பேர் இருப்பார்கள். அதைத் தொடர்ந்து கடைசி அணி. அதில்தான் நாங்கள் இருந்தோம். எல்லா அணியிலுமாக மொத்தம் எழுபத்திரண்டு பேர். வழிகாட்டிகள் இருவர்.

தாகம் இப்போதே நாக்கைப் பிடுங்கியது. கொண்டு வந்த தண்ணீர் போதாது. பாதிக்கு மேல் முடிந்து விட்டது. இந்த முறை வறட்சி வேறு. குளங்களிலும் போதியளவு நீர் இல்லை. இருக்கும் நீரையும் காட்டு விலங்குகள் கலக்கிச் சேறாக்கியிருந்தன. ஆலங்குளம் சற்றுப் பெரிய குளம். ஆனால், அந்தப்பக்கம் இந்தத் தடவை போக முடியாது என்று வேவுக்காரர்கள் சொல்லிவிட்டார்கள். எங்களுடைய பயணத்தை அவர்கள் ஆலங்குளம், பெரிய குளம், சல்லிக் காடு ஆகிய இடங்களில்தான் நோட்டம் பார்க்கிறார்கள் என்று தகவல் கிடைத்திருந்தது. ஆகவே அந்தப் பக்கத்தால் நகர வேண்டாம் என்று தொடக்கத்திலேயே பொறுப்பாளர் சொல்லி விட்டார். பொறுப்பாளருக்குத் தகவல் வழிகாட்டிகளின் வழியில் - ஆகையால் இது புதுப்பாதையின் வழியே நடக்கிற பயணம். புதுப்பாதையில் கொம்பாசைப் பிடித்துக் கொண்டு, வழிகாட்டிகளின் உதவியோடு நடந்து கொண்டிருக்கிறோம்.

வழிகாட்டிகளில் ஒருவர் குஞ்சண்ணை. அவருக்குக் கொம்பாஸில் எல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனால், அதைப் பார்க்கிறவை பார்க்கட்டும் என்று ஒன்றுமே சொல்லாமல், தன்பாட்டில் நடந்து கொண்டிருப்பார். குறுக்கு வழிகள், வழியில் தண்ணீர் எடுக்கக்கூடிய குளங்கள் அல்லது ஆற்றுப் படுக்கைகள், சமையலுக்குரிய இடங்கள், பழமரங்கள் உள்ள இடம், வேட்டைக்குரிய களம் எல்லாம் தெரியும். என்றாலும் இதையெல்லாம் நாம் நினைக்கிற மாதிரி லேசில் அந்தந்த இடங்களுக்குப் போய்ச் செய்துகொள்ள முடியாது. வாயைப் பொத்தி, வயிற்றை அடக்கி, கால்களையும் மனதையும் தூண்டி, நித்திரையை விரட்டி, எப்போதும் உடலை உஷாராக்கி வைத்திருந்தால்தான் வாழ்க்கை.

காட்டுக்குள் இறங்கினாலே கவனம் என்ற மாதிரி ஒரு எச்சரிக்கை உணர்வு தலைக்குள் நிரம்பிவிடும். உண்மையும் அதுதான். காடு என்பது எப்போதுமே வேட்டைக்களம்தான். முடிவற்ற வேட்டை நிகழும் களம். முடிவற்ற போர் எப்போதும் காட்டுக்குள்ளே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. காட்டில் நடந்து கொண்டிருக்கும்போது எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன், ஏதோ ஒன்றை எதுவோ ஒன்று வேட்டையாடிக் கொண்டிருக்கும். அல்லது ஒன்றைப் பலது வேட்டையாடும். புழுவை, பூச்சியை, முயலை, உக்குளானை, மானை என. இந்த வேட்டை முடிகிறதே இல்லை.

இதை விட இப்பொழுது நாங்கள் வேறு காட்டில் இறங்கியிருக்கிறோம். எங்களைத் தேடி அவர்கள். அவர்களைத் தேடி நாங்கள். முடிவில்லாத வேட்டையில்தான் எல்லாமா? நடந்து கொண்டிருந்தாலும் எண்ணங்கள் இப்படி எதையோவெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தன.

நடையில் பசியும் தாகமுமே அதிகம். காட்டுப் பசியும் காட்டுத்தாகமும் பிச்செறியும். இப்பொழுது தாகம் தொண்டையை விரட்டியது. கொண்டு வந்த தண்ணீர் முடிந்து விட்டது. இரண்டு கான் நீர் மட்டும்தானிருக்கு. அதை எடுக்கவே முடியாது. ஏதாவது பிரச்சினை என்றால், வழியை மாற்றி வேறு இடத்துக்கு நகர வேண்டியிருக்கும். அப்படி நடந்தால், அங்கே தண்ணீர் கிடைக்குமோ என்று தெரியாது. அங்கே தண்ணீரைக் காணும் வரை இந்த நீரே ஆதாரம். ஆகவே அதை எடுக்க முடியாது. ஆனால், என்னால் இதற்கு மேல் தாக்குப்பிடிக்கவும் முடியவில்லை. நடை சோர்கிறது. கால்கள் தளர்கின்றன. கண் மங்குவதைப் போலிருக்கு. ஆனாலும் ஒன்றும் செய்ய முடியாது. அணியோடு நடந்து கொண்டிருக்க வேணும். நடக்கிறேன். சுய நினைவோ சுய நிலையோ என்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அணி நகர்கிறது. அதன் வேகத்தில் நானும் நகர்ந்து கொண்டிருக்கிறேன். ஒரு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட பாகத்தைப்போல மாறியிருக்கிறேன் என்ற உணர்வு ஏற்படுகிறது. ஆகவே வேறு வழியில்லை. அந்தக் கதியில், அதன் போக்கில் நகர வேண்டியதுதான்.

என்ன ஆச்சரியமென்றால், காடு அப்படியே வெளியாகத் திடீரென விரிந்தது. பச்சை வெளி. அதனுடைய ஓரத்தில் நாங்கள் இப்போது. பசுமை கூடிய மரங்கள். பறவைகளின் கீச்சொலிகள். கூட்டுக் களிப்பு. குஞ்சண்ணை கையை அமத்திச் சைகை செய்தார். எல்லோரும் காட்டுடன் அடங்கினோம். அவரும் விச்சுவும் நடந்து முன்னே போனார்கள். சற்று நேரத்தில் ஆட்களைக் காணவில்லை. என்ன ஏதென்று ஒன்றுமே விளங்கவில்லை. அந்த இடத்திலேயே படுத்து விடலாம் போலிருந்தது. தூக்கம் கண்களைத் தழுவி இறுக்கியது.

எத்தனை விநாடி என்று தெரியவில்லை. முகத்தில் நீர்ப்பரப்பு. திடுக்கிட்டு விழித்தேன். அரவிந்தன் தண்ணீருடன் நின்றான். குஞ்சண்ணை, ஆற்றில் துணியை விரித்து தண்ணீரை அள்ளிக் கொண்டிருந்தார். சேதுவும் நம்பியும் கொள்கலன்களில் அதை நிரம்பிக் கொண்டிருந்தார்கள். இன்னும் எத்தனை நாட்களுக்கு அது தாக்குப்பிடிக்கும் என்று தெரியவில்லை.

# புதுவிதி
PUTHU VITHI



# நடத்திய பரிசுமழை போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம்

## முதல் பரிசு: 100,000/=

**எம்.சத்தியகௌரி**
இல. 19, ஈச்சமோட்டை றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## இரண்டாம் பரிசு: 60,000/=

**சிவராஜ் செந்தூரன்**
இல. 10A, மன்னார் வீதி, குருமண்காடு.

## மூன்றாம் பரிசு: 25,000/=

**எஸ்.செல்சியன்**
இல.33, அம்பாள்குளம், கிளிநொச்சி.

## ஆறுதல் பரிசுகள் 2,000/=

- **சிவானுராஜா சிவராசா,**
  வேலணை கிழக்கு, வேலணை.
- **நேசமீரா**
  நல்லகம், மீசாலை வடக்கு, கொடிகாமம்.
- **யோகராசா சுபாசினி**
  சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
- **ஜெயிலாப்தீன் பாத்திமா சாலினா**
  19/1 ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
- **செ.கமலறூபன்**
  றோஸ்வஸ், புதிவர் கண்டன், முருங்கன், மன்னார்.
- **யோண்டார்வின், நிஷாந்தினி**
  48, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
- **அ.நியூட்டன்**
  10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
- **சுந்தரேஸ்வரன் கோபிகா**
  4 ஆம் வட்டாரம், முள்ளியவளை, (புதறிகுடா)
- **ஜெயறோஸ்**
  யாழ். இந்து மகளிர் கல்லூரி
- **கே.இராஜகோபால்**
  கந்தசாமி கோயிலடி, அடைக்காலம்தோட்டம் வட்டுக்கோட்டை

**மேலும் 6 ஆறுதல் பரிசுகளை வென்றவர்களின் விவரம்**

- **ஜெ.கனிஸ்ராஜ்**
  வசாவிளான் தெற்கு, திடற்புலம்.
- **முருகன் நடராசா**
  வனசேகரம் கடை எதிர், முதலாம் வட்டாரம் கைவேலி, புதுக்குடியிருப்பு.
- **எஸ். கிருத்திகா**
  இல.204/4 யுனிட் தர்மபுரம், கண்டாவளை
- **நடேசு சுவேதன்**
  138/1 லக்சபான வீதி, தோணிக்கல், வவுனியா
- **ம.கஜேந்திரன்**
  கோட்டையன் குளம், அக்கராயன்.
- **சிவபாலு பிரதீபா**
  போடிற் றோட், புலோலி மத்தி. பருத்தித்துறை.

வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் சித்திரைப் புதுவருட விழாவில் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு :
021 493 7777

புதுமதி

## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 27

# காரைதீவு (காரைநகர்)

வட பிராந்தியத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுள் காரைநகரும் ஒன்று. இது இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மேற்குத்திசையில் அமைந்துள்ள ஏழு (சப்த) தீவுகளில் ஒன்றாகும். மற்றைய தீவுகளைவிட யாழ். நகருக்கு அண்மையில் இருப்பதுதான் காரைநகர். இது நாற்புறமும் கடலினால் சூழப்பட்ட ஒரு தீவாகும்.

காரைதீவு 1923-09-12 ஆம் திகதி முதலாக அரச ஒப்புதலுடன் “காரைநகர்” என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது.

1887ஆம் ஆண்டு பதிப்பிடப்பட்ட தட்சிண கைலாச புராணத்திலும் காரைநகர் என்ற வழக்கு இடம்பெற்றிருத்தல் கவனிக்கத்தக்கது. இத்தீவு தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் 2 கிலோ மீற்றர் நீளமுள்ள பாலத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இத் தீவின் தெற்கே 1.5கிலோ மீற்றர் தொலைவில் ஊர்காவற்றுறையும் தென்மேற்கே எழுவைதீவும், 20கிலோ மீற்றர் தொலைவில் தென்னிந்தியக் கரையும் அமைந்துள்ளன. அதாவது வடக்கு மேற்குத் திசையாக ஆழமான பாக்குநீரிணைக் கடலும் கிழக்கு, தெற்குத் திசையாக ஆழமற்ற வற்றும் தன்மையுள்ள பரவைக் கடலாலும் சூழப்பட்டுள்ளது.

இவ்வூரில் ஏராளமான காரைச் செடிகள் நின்றமையால் இப்பெயர் தோன்றியதாகக் கூறப்படுகிறது. அதேவேளை இலங்கையில் காரைதீவு என்ற பெயரில் மூன்று ஊர்கள் காணப்படுவதால் அவற்றிலிருந்து இதனைப் பிரித்துக் காட்டவும், பாலத்தின் மூலம் இத்தீவு இணைக்கப்பட்டதன் காரணமாகவும் இதற்குக் காரைநகர் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. மேலும் கூறுவதானால் பிரித்தானியரின் ஆட்சியில் 1869ஆம் ஆண்டில் அப்போது அரசாங்க அதிபராக இருந்த துன்வைந்துரையால் பொன்னாலைக் கடலுக்கூடாக கற்தெருவும், ஒன்பது பாலங்களும் அமைந்து காரைதீவைக் குடாநாட்டுடன் இணைத்தார். இவ்விணைப்பு தெருவினது நீளம் சுமார் 3 கிலோ மீற்றர் ஆகும்.

இத்தரைத் தொடர்பை அடுத்து சேர். பொன். இராமநாதனின் விதைந்துரைப்புடன் காரைதீவினை 1923ஆம் ஆண்டு தொடக்கம் “காரைநகர்” என்று பெயர் மாற்றிக் கொண்டனர்.



காரைநகருக்கு அயலிலுள்ள இடக் குறிச்சிகளது பெயர்கள் அங்கு பண்டைய கால்த்தில் அரசாட்சி இடம்பெற்றிருப்பதை புலப்படுத்துவதாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக காரைநகர் கிழக்கில் “களபூமி”மற்றும் பலிக்காடு, இராசாந்தோட்டம், நீலங்காடு, தங்கோடை அதாவது போர் நடந்த இடம். களபூமி, நீலன் இருந்த இடம் நீலன்காடு, இராசா இருந்த இடம் இராசாந்தோட்டம், படைவீரர்கள் தங்கிய இடம் தங்கோடை எனவும் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. இதில் கண்ணகி வழக்குரைகதையில் தங்கோடை என்ற இடப்பெயர் குறிப்பிடப்படுவது இவ்விடப் பெயரின் பழைமையை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

புரதான காலத்தில் ஏலேலன் என்ற மன்னனின் கோட்டை இங்கு இருந்ததென்றும், தமிழ்நாட்டார் படைநடத்தி வந்து இங்கு களம் குறித்துப் போர் செய்தார்களென்றும் அவ்வாறு களம் குறித்துப் போர் செய்த இடம் களபூமி என்ற பெயரால் அழைக்கப்படலாயிற்று. களபூமியில் நிகழ்ந்த போரில் வாகையாம் வெற்றி கிடைத்தமையால் அதனைக் கொண்டாடிய இடம் வலந்தலை என்றும், போருக்காகக் கள வேள்வி செய்த இடம் பலிக்காடு என்றும்- கொள்ளலாம். கள வேள்வியின்போது வீரர் பாடி வீடமைத்து ஆறியிருந்த இடம் தங்கோடை எனப் பொருள்படுமென கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்களில் இலங்கை இடப்பெயராய்வு நூலில் கூறப்பட்டுள்ளது.

காரைநகரின் பழைமையை மேலும் விளக்க களபூமியில் பெருங்கற் காலப் பண்பாட்டுக்குரிய (கி.மு. 1000- கி.பி. 300) கறுப்பு, சிவப்பு மட்பாண்டபண்பாட்டுக் கருவிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இவ்விடத்தின் திராவிடப் பண்பாட்டுப் பழைமையை நிரூபிக்கின்றது. (பொ. இரகுபதி) அதேபோல சத்திரந்தை என்ற இடத்தில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்தைமைக்கான தடையங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பௌத்த ஜாதகக் கதைகளில் ஒன்றாகிய அபித்த ஜாதகம் என்பதில் இத் தீவுபற்றிய ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. “அசித்தன் எனும் பார்ப்பன முனிவன் வாரணாசியினின்றும் காவிரிப்பூம்பட்டினம் வந்து, அங்கிருந்து வான்வழியாகக் “காரைதீபம்” என்ற தீவுக்கு வந்தான். ஆங்கு குடிலமைத்துத் தவஞ் செய்து காரை இலைகளை உறைப்பும் உப்புமின்றி மாற்றம் செய்யப்பட்டது. ஐரோப்பியருடைய காலத்தில் ஒல்லாந்தரால் நீலங்காடு எனும் இடத்தில் ஒரு கோட்டை கட்டப்பட்டிருந்தது. அதேபோல 1916 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிலத்திலிருந்து உச்சி வரை 33மீற்றர் உயரமுடைய காரைநகர் கோவளம் எனும் இடத்தில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு முக்கியமானது. 100வருடங்கள் பழைமைவாய்ந்த தொன்றாக இது விளங்கிவருகின்றது.

இயற்கையாக அமைந்த கடல் அலைகள் குறைந்த கடல், இயற்கையழகுடன் கூடிய சவுக்கு மரம் நிறைந்த வெண்ணிற மணற்பாங்குடன் கூடிய அமைதியான சூழல் நிறைந்த சுற்றுலா மையமாக காரைநகர் கசூரினா கடற்கரை காணப்படுகின்றது. காரைநகரில் இந்துநெறி மேன்னிலையில் காணப்படுகின்றது. ஈழத்துச் சிதம்பரம் என அழக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் உள்ளது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகைச் சிறப்பும் அமையப்பெற்ற பெருங் கோயிலாகும். அதேவேளை முத்துமாரியம்மன், பிள்ளையார், கருங்காலி ஐயனார், முருகமூர்த்தி, அம்பாள், நாச்சிமார் முதலான தெய்வங்களுக்கு கோயில்கள் காணப்படும் அதேசமயம் கிறிஸ்தவ தேவாலயமும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக தமிழர் தம்பரம்பரிய திராவிட மரபிலமைந்த பண்பாட்டுப் பூமியாகவும் தொல்பியல் பொருள்கள் நிறைந்த பழைமையான மையமாகவும் இந்துநெறி தழைத்தோங்கும் இடமாகவும் காரைநகர் மண்வாசனை வீசி வருகின்றது.





# வாரப்பலன்

## மேடம்

குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். உறவினர்களிடம் இருந்த கருத்துவேறுபாடு மறையும். வியாபாரம் சுமாரான அளவில் நடக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்துக்கமைய நடப்பர்.

## ரிஷபம்

பெரும்பாலான கிரகங்கள் அளப்பரிய நற்பலன்களை வழங்குவர். மனதில் சாந்த குணம் நிறைந்திருக்கும். நண்பர்களின் ஆதரவால் நன்மை உண்டாகும். சமூகத்துக்குப் பயன் தரும் நற்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

## மிதுனம்

எதிர்பார்த்த நற்செய்தி வந்து சேரும். விரும்பியபடி சொத்து ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். மங்கல நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்து கொள்வீர் கள். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவது நல்லது.

## கடகம்

புத்திரரின் திறமை வளர்ந்திட ஆலோசனை சொல்வீர்கள். நண்பரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். வழக்கு, விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும்.

## சிம்மம்

புதிய செயற்திட்டத்தினால் நல்ல முன்னேற்றம் உருவாகும். புத்திரர் பெருமை தேடித்தருவர். விரும்பிய உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். உடல் ஆராக்கியம் சீராகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு சிறப்பாக நடந்தேறும். மனைவியின் அன்பு மனதில் நெகிழ்ச்சி தரும்.

## கன்னி

புத்திரர் படிப்பில் முன்னேற்றம் காண்பர். கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும். வியாபாரத்தில் அளவான மூலதனம் போதுமானது. சீரான லாபம் கிடைக்கும். வேலையாட்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலைப் பின்பற்றவும் .

## துலாம்

உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும்.

## விருச்சிகம்

தாயின் அன்பும், ஆசியும் நம்பிக்கையை வளர்க்கும். புத்திரரின் செயல் குறையைச் சிறந்த அணுகுமுறையால் சீர் செய் வீர்கள். வழக்கு, விவகாரங்களில் நிதானித் துப் பேசுவது நல்லது. மனைவியர்க்ண வர்மாரின் நல்ல குணங்களை பாராட்டுவர்.

## தனுசு

திட்டமிட்ட செயல்களை உற்சாகமுடன் நிறைவேற்று வீர்கள். புத்திரர்களின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பதால் எதிர்காலத்தில் சிரமம் விலகும்.

## மகரம்

திட்டமிட்ட பணி சிறந்து, முழு அளவில் பலன் தரும். தம்பி, தங்கைக்குச் சுப நிகழ்ச்சி நடந்தேறும். புதிய வீடு வாகனம் விரும்பியபடி வாங்கலாம். புத்திரரின் எதிர்கால நலனுக்கு தேவையானதைச் செய்வீர்கள்.

## கும்பம்

உங்கள் பேச்சில் உண்மை, நேர்மை நிறைந்திருக்கும். நண்பர்களின் மத்தியில்கூடுதல் மதிப்பு உண்டாகும். சுற்றுலாத்திட்டம் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். லாபம் சுமாராக இருக்கும்.

## மீனம்


உங்களைக் குறை சொன்னவரும் பாராட்டுகின்ற புதிய சூழல்நிலை ஏற்படும். வாகனத்தின் பயன்பாடு அளவுடன் இருக்கும். உடலுக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள்.



நானாட்டான் - அளவக்கை கிராமத்தில் “நண்பனின் தேவை நற்பணி மன்றம்” நடத்திய 3 மாதகால இலவச கணினிப் பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



சமூக சேவையாளரும் பிரபல சட்டத்தரணியுமான பொன். பூலோகசிங்கம் கடந்த திங்கட்கிழமை காலமானார். திறமைமிக்க சட்ட ஆலோசகரும், சிறந்த இலக்கியவாதியும் ஆவார். ஓர் அமைதியான சமூகப் பற்றாளர், செயற்பாட்டாளர், சமூகப் பொறுப்புள்ள ஊடகவியலாளர், விரிவுரையாளர் என பன்முக ஆளுமை கொண்ட அவருக்கு புதுவிதியின் இதய அஞ்சலி.



‘கை கொடுக்கும் நண்பர்கள்’ என்னும் அமைப்பு தற்கொலைகளுக்கு எதிரான வழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் அது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் வவுனியாவில் விநியோகிக்கப்பட்டன.



திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் கண்டனப் போராட்டம் நடத்தினர்.



அரிமா சங்கத்தின் மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் பெர்னாண்டோவும் அவரது துணைவியாரான லயன் பத்மினி பெர்னாண்டோவும் கலந்துகொண்ட இணுவில் அரிமா சங்கத்தின் கூட்டமொன்று கடந்த மாதம் 4 ஆம் திகதியன்று இணுவில் கந்தசுவாமி கோவிலடியிலுள்ள அறிவாலயத்தில் இடம்பெற்றது. மாணவர் கல்வி மேம்பாட்டுக்காக நிதி உதவிகளை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# நாட்காட்டியின் கதை..!

"கணக்கு கூட்டுவது எனும் பொருள் தரும் 'கலண்டே' எனும் இலத்தீன் உச்சரிப்பிலிருந்து உருவானதுதான் கலண்டர் (Calendar) எனும் ஆங்கிலச்சொல். புவியியல் மற்றும் காலநிலைகளில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களே ஆரம்ப கால நாட்காட்டிகளுக்கு அடிப்படையாக அமைந்தன. நைல் நதியில் ஆண்டுதோறும் ஏற்படும் வெள்ளப்பெருக்கை அடிப்படையாகக் கொண்டு புராதன எகிப்தியர் உருவாக்கிய நாட்காட்டி இதற்குச் சான்று. இன்று நம் முன்னே இருக்கும் நாட்காட்டி கி.மு.45 இல் ஜூலியஸ் சீசரால் உருவாக்கப்பட்ட ஜூலியன் கலண்டரே!

இன்று உலகெங்கும் பரவலாகப் பயன்படுத்தப்படும் நாட்காட்டி முறையே கிரிகோரியன் கலண்டர்.! பதின்மூன்றாம் போப் ஆண்டவராக இருந்த போப் கிரிகோரியின் ஆணைப்படி, அலோஷியஸ் லிலியஸ் என்னும் மருத்துவரே 1582 பெப்ரவரி 24 இல் ஜூலியன் நாட்காட்டியில் காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்தியமைத்து கிரிகோரியன் நாட்காட்டியை உருவாக்கினார். இயேசு கிறிஸ்துவின் பிறந்ததினத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த நாட்காட்டிகளின் வருடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

ஸ்பெயின், போர்த்துக்கல், போலந்து, லித்துவேனியா, இத்தாலியின் பெரும்பாலான பகுதிகள் போன்றவையே கிரிகோரியன் நாட்காட்டியை முதன்முதலில் ஏற்றுக்கொண்டன. 1582 ஒக்ரோபர் முதல் இவை கிரிகோரியன் நாட்காட்டியைப் பயன்படுத்தத் தொடங்கின. இங்கிலாந்தும்,அமெரிக்காவும் 1752 இற்கு பின்புதான்! கிரிகோரியன் நாட்காட்டியை அங்கீகரித்த கிரேக்க நாடே இந்தப் பட்டியலின் கடைசி நாடு!

# காலை வெட்டிய வீரம்

ஒரு நாள் மாலை நேரம் அரண்மனை தோட்டத்தில் அரசரும் பெரிய தனவந்தர்களும் படைத் தளபதிகளும் கூடி இருந்தனர்.

ஒவ்வொருவரும் அவர்கள் சண்டையில் செய்த வீர தீரச் செயல்கள் பற்றி பேசிப் பெருமைபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது தெனாலி ராமனும் அங்கு இருந்தான். அவர்கள் பேச்சையும் கேட்டுக் கொண்டு இருந்தான். அவர்கள் பேச்சு அவனுக்கு பிடிக்கவில்லை.



"போங்கள் அய்யா , நீங்கள் எல்லாம் என்ன பிரமாதமாக சாதித்து விட்டீர்கள் . நானும் போர்க்களம் சென்று இருக்கிறேன். அதில் ஒருவனுடைய காலை என் வாளால் வெட்டி வீழ்த்தி விட்டேன்" என்றான்.

அதைக் கேட்ட அனைவரும் தெனாலிராமன் கூட, போர்க்களம் சென்றிருப்பானா என்று யோசிக்க தொடங்கினர்.

பின் அதில் ஒருவன் "காலை வெட்டியதாக சொல்கிறாயே. அவன் தலையை ஏன் வெட்டவில்லை?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட தெனாலிராமன் " தலையை எனக்கு முன்பே எவனோ வெட்டிவிட்டானே ! நான் என்ன செய்வது?" என்று சொன்னதுதான் தாமதம் . மன்னர் உட்பட அனைவரும் கொல்லெனச் சிரித்துவிட்டனர்.

# மனிதனை பற்றிய சில உண்மைகள்!

3



- ஆண்களின் உடல் பாகத்தில் மிகவும் வளரக்கூடிய முடி, தாடியில் வளரும் முடிதான். ஏனென்றால் ஒருவர் தனது வாழ்நாளில் தாடியை எடுக்காவிட்டால்அது 30 அடி நீளம் வரை வளர்ந்து விடும்:
- 60 வயதாகும்போது நாக்கின் சுவைமொட்டுகளின் பெரும் பகுதி அழிந்து போய்விடுகின்றன.
- மனித தாடை 80 கிலோ எடையை இழுத்து அசைக்கக் கூடிய தாகும்.
- சிரிப்பது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. 6 வயது வரை குழந்தைகள் ஒரு நாளைக்கு 300 தடவைகள் சிரிக்கின்றன. 18 வயதைக் கடந்தவர்கள் ஒரு நாளைக்கு 100 தடவை மட்டுமே சிரிக்கிறார்கள்.
- ஒரு மனிதனின் உடம்பில் 600-க்கும் அதிகமான தசைகள் இருக்கின்றன. இது உடல் எடையில் 40 சதவீதமாகும்.

# துன்பத்தை உதறித் தள்ளு - கதையும் பாடமும்


ஒரு ஊரில் சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவரிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அதற்கு வயதாகிப் போனதால் பொதி சுமக்கச் சிரமப் பட்டது. நடக்கவும் சிரமப் பட்டது.ஒருநாள் தொழிலாளி தன் கழுதையுடன் சென்று கொண்டிருந்தபோது கழுதை வழியில் இருந்த பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்து விட்டது.

எப்படியாவது அந்தக் கழுதையைத் தொலைத்து விட நினைத்திருந்த தொழிலாளி இதுதான் சமயமென்று நினைத்தார்.கழுதையை மேலே தூக்கிவிடாமல் அப்படியே கிணற்றில் புதைத்து விடுவோம் என அருகில் இருந்தவர்களைக் கூப்பிட்டார்.கழுதை அப்படியே புதைந்து போகட்டும் என்று எல்லோருமாகச் சேர்ந்து மண்வெட்டி கொண்டு வந்து அருகிலிருந்த மண்ணை வெட்டிக் கிணற்றுக்குள் தள்ளினர்.

ஆரம்பத்தில் தன் மீது விழும் மண்ணைக் கண்டு திகைத்த கழுதை பின்பு சுதாகரித்துக் கொண்டது.

தனக்கு நேரும் துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்தால் பயனில்லை. ஏதாவது செய்து தப்பிக்க வேண்டும் என நினைத்தது. தன் மீதும் விழும் மண்ணை உடம்பை சிலிர்த்து உதறியபடியே கொஞ்சம் கொஞ்சமாக அடி எடுத்து வைத்து வெளியே வர முயற்சித் தது.மேலே இருந்தவர்களும் மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டேயிருந்தனர்.தப்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளே பிரதானமாக இருந்ததால் கழுதையும் வேகமாக மண்ணை உதறி விட்டபடி மேலே ஏறி வந்து விட்டது.

தொழிலாளியும் கழுதையின் விடாமுயற்சியில் வியந்து மனமிறங்கி தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.மனிதர்களாகிய நமக்கும் பல விதங்களில் சோதனைகளும் துன்பங்களும் வந்து சேரலாம்.அதையே நினைத்து உழன்று கொண்டிராமல் அதை



எல்லாம் உதறித் தள்ளி விட்டு மீண்டு வர முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்.

## பழைய நாடுகளும் புதிய பெயர்களும்!

2

மனிதர்கள் மட்டும்தானா மாறி வருகிறார்கள்? பல நாடுகளின் பெயர்கள், எல்லைகளும் மாறிக்கொண்டே, இருக்கின்றன. அவற்றின் பழைய பெயர்களை பார்க்கலாமா?

சோவியத்யூனியன் - ரஷ்யா,
பர்மா - மியன்மார்,
கிழக்கு பாகிஸ்தான் - பங்களாதேஷ்.
சிலோன் - ஸ்ரீலங்கா,
கம்பூச்சியா - கம்போடியா,
பாரசீகம்,பெர்ஷியா - ஈரான்,
மொஸப்பத்தேமியா - ஈராக்,
சயாம் - தாய்லாந்து,
பார்மோஸா (Formosa) - தாய்வான்,
ஹாலந்து - நெதர்லாந்து,
மலாவாய் - நியூசிலாந்து,
மலகாஸி - மடகாஸ்கர்,
டச் ஈஸ்ட் இண்டீஸ் (Dutch East Indies) - இந்தோனேசியா,
சாண்ட்விச் தீவுகள் - ஹவாய்,
பெக்குவானாலாந்து (Bechuanaland) - பொட்ஸ்வானா (Botswana)

# விருது வழங்கப்படாத வீராங்கனை கல்பனா தத்

கல்பனா என்றதுமே பலருக்கு நினைவுக்கு வருவது "நாஸா" விண்வெளி மையத்தின் மூலம் விண்வெளி ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்ட விண்வெளி ஓடம் திரும்பிவரும்போது, அது தரையிறங்க சில நிமிடங்கள் இருக்கும்போது வெடித்துச் சிதறியபோது உயிரிழந்த வீரப் பெண்மணி கல்பனா தத்தான். அவருக்கு ஏராளமான விருதுகள் வழங்கப்பட்டதுடன் அவரின் மரணத்துக்காக முழு இந்தியாவுமே கண்ணீர்விட்டது.


ஆனால், விருது வழங்கப்படாத வீராங்கனையாக வரலாற்றில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பதித்தவர். ஆயுதப் போராளியும், புரட்சிகர விடுதலைப் போராளியுமான கல்பனா தத்தைப் பற்றியே இங்கு நினைவுகூருகிறோம். பெண்ணடிமைத் தனத்தில் உறைந்து கிடந்த பாரத பூமியிலே ஆயுதமேந்திக் களமிறங்கிச் சாதனை படைத்தவர்தான் கல்பனா.

சிட்டாகொங் அன்றைய இந்தியாவின் பிரதான துறைமுக நகரங்களில் ஒன்று. தற்சமயம் இது பங்களாதேஷ் நாட்டில் உள்ளது. அங்கு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களை வேட்டையாட இந்தியா முழுவதற்கு ஆயுதங்களை விநியோகிக்கும் ஆயுதக் கிடங்கு அமைந்திருந்தது. 1930 ஏப்ரல் 19ஆம் திகதி சூர்யா சென் தலைமையிலான "இந்துஸ்தான் குடியரசு இராணுவம்" என்ற புரட்சிவாதிகளின் அமைப்பு சிட்டாகொங் ஆயுதக் கிடங்கின் மேல் தாக்குதல் தொடுக்கிறது. பத்து நிமிடங்களில் ஆயுதக் கிடங்கு கைப்பற்றப்பட்டு பெருந்தொகையான ஆயுதங்கள் அள்ளப்படுகின்றன.

தாக்குதலில் இறங்கிய நான்கு அணிகளில் ஒரு அணியைத் தலைமை தாங்கி வழிநடத்தியவர் கல்பனா தத். இந்துஸ்தான் குடியரசு இராணுவம் நடத்திய முதல் தாக்குதல் நடவடிக்கை. ஆனாலும், சிறப்பாக இராணுவ வியூகம் அமைக்கப்பட்டுப் போராளிகள் களமிறங்குகின்றனர்.



தகவல் உடனடியாக இராணுவத் தலைமையகத்துக்குச் சென்றுவிடாமல் தடுக்க ஒரு அணி தொலைத் தொடர்பு நிலையைத்தைக் கைப்பற்றுகிறது. துறைமுகம் போராளிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு கடல் மூலமான உதவிகள் தடுக்கப்பட்டன. இன்னொரு அணியினர் புகையிரதத் தண்டவாளங்களைத் தகர்த்தனர். சூர்யா சென் தலைமையில்



ஒரு பக்கமும் கல்பனா தத் தலைமையில் மறுபுறமும் தொடுக்கப்பட்ட தாக்குதலில், 10 நிமிடங்களில் கிடங்கு கைப்பற்றப்பட்டு ஏராளமான ஆயுதங்கள் அள்ளப்படுகின்றன.

ஆங்கில அரசு ஈடாடிப் போகிறது. பெரும் படையணிகளை அனுப்பி போராளிகளைச் சுற்றி வளைக்கிறது. 150 பேரைக் கொண்ட போராளிகளின் அணிகள் கடுமையாக எதிர்த்துப் போரிடுகின்றன. அப் போரில் 30 போராளிகளும் 50 சூர்க்காப் படையினரும் கொல்லப்படுகின்றனர். எனினும் போராளிகள் முற்றுகையை உடைத்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் மலைப் பகுதிக்குப் பின் வாங்கித் தலைமறைவாகின்றனர்.

சூர்யா சென், கல்பனா உட்பட போராளிகள் தலைமறைவான நிலையிலும் பல்வேறு தாக்குதல்களை நடத்தினர். மூன்று வருடங்களுக்கு மேலாக பலம் பொருந்திய பிரித்தானிய இராணுவத்தைப் பல்வேறு தாக்குதல்கள் மூலம் திணறடித்தனர். சிட்டாகொங்கிலுள்ள ஐரோப்பிய கிளப்பின் மீது தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான வேவுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கல்பனா கைது செய்யப்படுகின்றார். ஆங்கில உளவுப் பிரிவினர் கல்பனா பற்றிய உண்மை விவரங்கள் தெரியாமையால் அவர் பிணையில் விடப்படுகிறார். அவர் உடனடியாகவே தலைமறைவாகிறார்.

1933 செப்ரெம்பர் 17 இல் சூர்யா சென்னுடன் மறைவிடத்தில் தங்கியிருந்தபோது படையினரால் சுற்றிவளைக்கப்படுகின்றனர். சூர்யா சென் கைது செய்யப்பட்டபோதிலும் கல்பனா சிறு காயத்துடன் தப்பிவிடுகிறார். எனினும் அவர் இறுதியில் 1933 மே மாதம் கைது செய்யப்பட்டார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. எனினும் மேன்முறையீடு மூலம் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு கொடிய அந்தமான் சிறைக்கு அனுப்பப்படுகிறார்.

இந்திய வரலாற்றில் முதன்முதலாக மரணதண்டனை விதிக்கப்பட்ட பெண் இவர் என்பது ஒரு முக்கிய வரலாற்றுப் பதிவாகும்.

1934 ஜனவரி 11இல் கல்பனாவின் அன்புக்குரிய தலைவன் சூர்யா சென் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தின் வித்தாகிறார். ஆறு ஆண்டுகளின் பின் விடுதலையாகி வந்த கல்பனா இந்திய பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து 1943 கொடிய வங்காளப் பஞ்ச காலத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். அதேபோன்று வங்கப் பிரிவினைக்கு எதிரான போராட்டங்களிலும் காத்திரமான பங்களிப்பையும் நல்கினார்.

1995இல் இவர் காலமாகும் வரை மக்கள் பணிக்கே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார். யார் யாருக்கோ எல்லாம் பத்ம பூசண், பத்ம விபூசண் போன்ற உயர் விருதுகளை வழங்கும் இந்திய ஆட்சியாளர்கள் சுதந்திரப் போராட்டத்தில் இவர் வழங்கிய ஒப்பற்ற அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் பாராட்டியோ இந்தியாவில் புரையோடிப் போயுள்ள பெண்ணடிமைத் தனத்தை உடைப்பதில் முன்னுதாரணமாக விளங்கியமையையோ கௌரவிக்கவில்லை.

எனினும் இவரது வீர வரலாறு "ஹேலெய்ன் ஹம் ஜான்சா" என்ற பேரில் சினிமா படமாக வெளிவந்தது. கல்பனாவின் பாத்திரத்தில் தீபிகா படுகோன் நடித்திருந்தார். இது தொடர்பாக இந்திய இந்துத்துவ பிற்போக்கு அமைப்புக்கள் தீபிகாவுக்கு சாவு அச்சுறுத்தல் விடுத்தனர். ஆனால் தீபிகா, நான் நடிப்பு வாழ்வின் உண்மையான நிறைவை கல்பனா பாத்திரத்தில் நடித்ததன் மூலமே பெற்றுக்கொண்டேன்" எனப் பதிலடி கொடுத்துவிட்டார்.

எப்படியிருப்பினும் இந்திய விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்த" ஒப்பற்ற புரட்சிகரப் பெண் போராளி" என்ற விருது மக்கள் மனதில் என்றும் நிலைபெற்றிருக்கும்.



■ ஸ்ரீராகவன்

# பொம்பிளைப் பி

உலக சனத்தொகை இன்னும் சற்றுநேரத்தில் ஒரு ஜீவனால் அதிகரிக்கப்போகின்றது. அந்த மகத்தான சேவையைச் செய்தமைக்காக எனக்கும் என் இளம் மனைவிக்கும் இந்தச் சமூகம் "அப்பா, அம்மா" பட்டஞ் சூட்டி கௌரவிக்கப்போகின்றது.

இன்னும் சிறிது நேரம்....சிறிது நேரந்தான் என் மனைவிக்கு பிரசவ நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவள் வேதனையால் முனகுகிறாள். வியர்வைத் துளிகள் அவளது அச்சத்தை கோடிகாட்டியபடி முகமெங்கனும் கோடிடுகின்றன.

சுதந்திரமாக புரண்டு படுக்கமுடியாமல் என் அன்புப் பரிசை சுமந்தபடி அவள் திண்டாடுகிறாள். எனக்கோ அருகில் சென்று அவளை ஆசுவாசப்படுத்த வேண்டும்போல் தோன்றுகிறது. ஆனால், "மகளிர் மட்டும்" என் எண்ணத்துக்கு தடை விதிக்கிறது.

நான் தவிப்போடு பார்க்கிறேன். அவளை பராமரிப்பதற்காக கூட நிற்கும் ஆயா என்னை நோக்கி சைகை செய்கிறாள். நான் அதைப் புரிந்துகொள்கிறேன். சுவாரஸ்சியமான ாவலொன்றுக்குள் மூழ்கியிருந்த அந்த ாதியின் முன் "சுப்பர் சொனிக் " வேகத்தில் பிரசன்னமாகிறேன். நான் படபடப்புடன் சொன்னதைப் பொறுமையாகக் கேட்ட அந்தத் ாதி சிரித்தவாறே "அது நாங்கள் பார்க்கிறோம் ங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதைங்கோ" என்றுவிட்டு செல்கிறாள். அவர்களைப் பொறுத்த ரை இது அவர்களது நாளாந்தக் கடமைதானே.

நான்கு சக்கர நாற்காலியொன்று விரைகிறது. னைவியை அதில் இருத்தி அழைத்து ருகிறார்கள். அவள் நாற்காலியின் விளிம்பில் லைசாய்ந்தபடி... கண்களைச் செருகி.. புரைமயக்கத்தில்... பரிதாபமாக இருக்கிறது. ாவம் அவள். இனியும் அவளை இப்படி வதனைப்படுத்தி இன்னொரு குழந்தை பெறவேண்டுமா? என்ற திடீர் ஞானோதயம் வரம் செய்யப்படாத என் தாடியைப்போல் னக்குள் தற்காலிகமாக முளைக்கிறது. ண்டும் அது எந்த இரவிலும் உடைந்து பாகலாம். பிமச்சாரியம் காக்க நானொன்றும் ணிபுங்குவனில்லையே! எல்லோரையும்போல் ானும் உணர்வுகளுக்கு விலங்கிடமுடியாத ஒரு ராசரி மனிதன் தானே.

மனைவியைத் தைரியப்படுத்தியபடி பிரசவ புறைக்குள் அழைத்துச் செல்கிறார்கள். என் ண்களுக்கு வெள்ளையுடையணிந்த அந்தத் ாதிகள் தேவதூதர்களாக தென்படுகிறார்கள்.

"ஸ்ரெதஸ்கோப்" தாலிகட்டி மருத்துவ சவையை மணம் முடித்துக்கொண்ட பாம்பிளை டொக்ரர் ஒருவர் தன் ண்களாலேயே, என் நாடித்துடிப்பை ார்த்துவிட்டு பிரசவ அறைக்குள் நுழைகிறார்.

நான் ஆஸ்பத்திரி வராந்தாவில் புங்குமிங்குமாக தவிப்புடன் நடக்கத் தொடங்குகிறேன். எனக்குள் பல எண்ணங்கள் புலை மோதுகின்றன.

ஆம்பிளைப்பிள்ளை பிறக்குமா? பொம்பிளைப் ிள்ளை பிறக்குமா? எதிர்வு கூற முடியாத கழ்வுதான். மனைவியின் சூலை வெற்றிகொண்ட ன் விந்து தீர்மானிக்கப்போகும் விடயம். யற்கையின் இரகசியம். கடவுள் என்பவரைத் விர வேறு எவருக்கும் புரியாத புதிர்.

ஆனாலும் எனக்குள் ஒரு நம்பிக்கையிருந்தது. ஆம்பிளைப்பிள்ளைதான் பிறக்குமெண்டு. எல்லோரிடமும் "அது பொம்பிளை தான்..." எண்டு சொல்லிக்கொண்டேனாயினும் எனக்குள் இப்படியும் ஒரு நம்பிக்கையிருந்தது உண்மைதான்.

எப்பவும் தலைப்பிள்ளை ஆம்பிளைப் பிள்ளையா இருந்தால்த்தானே தேப்பனுக்கு டப்பு. இந்தச் சீதன சாம்ராஜ்ஜியத்தில் ாவன்தான் தன் முதல் பிள்ளையே பெட்டைச்சியாய் பிறப்பதை விரும்புவான்.

நான்கூட எங்கள் குடும்பத்தில் மூத்தவன்தானே. எனக்கடுத்து இரண்டு தங்கை கள், பிறகு கடைக்குட்டியான "குட்டித்தம்பி". எங்கள் நால்வரையும் இடை வெளிவிடாது சுமந்து பெற்ற அம்மாவின் மீது இப்போ என்னையறியாமலே ஒரு மதிப்பு வளர்ந்தது.

ஐயாவை நினைத்தால்தான் ஆத்திரமாக இருந்தது. இத்தனை வயதாகியும் ஐயா இன்னும்தான் மாறவில்லையே. முன்பு குடித்துவிட்டு வந்து அம்மாவை துன்புறுத்தியது போல்... இப்போதும் அந்தாள் என்ன மனுஷன்? என்ன கோபமாக இருக்கட்டும், இதுவரை காலம் ஒரு நாளாவது தன் மருமகளை வந்து பார்த்தாரா? இல்லை வீட்டுக் காரரைத் தன்னும் அனுப்பிவைத்தாரா?

காலடியோசை யாரோ வருகிறார்கள். அம்மாவாக இருக்கக்கூடதா என்ற எதிபார்ப்புடன் திரும்பிப் பார்த்தேன். அந்தப் பொம்பிளை டாக்டர்தான் பிரசவ அறையிலிருந்து என்னை நோக்கி வருகிறாள். "என்ன மிஸ்" தயக்கத்துடன் கேட்டேன்.

அவள் வந்ததும் வராததுமாக "உங்கட மிஸ்ஸூக்கு அவசரமா ஒரு "இன்ஜெக் ஸன்" தேவை வேண்டியாங்கோ" என்றவாறே பக்கத்து அறையொன்றுக்குள் நுழைந்தாள். நான் தயக்கத்துடன் பின் தொடர்ந்தேன்.

வெள்ளைக் கடதாசியொன்றில் இடியப்பம் புளிந்த மாதிரி ஆங்கிலத்தில் ஏதோ கிறுக்கினாள் "இது இப்ப அரசாங்கம் அனுப்பிறயில்லை. வெளியிலைதான் வேண்டவேணும்" நான் ஸ்ரீலங்கா ஜனநாயக அரசாங்கத்தையும், மதிப்புக்குரிய அதி உத்தம ஜனாதிபதி அவர்களையும் சபித்தவாறே சுவரில் பார்வையைப் பதியவிட்டேன். அங்கேயிருந்த மின்செருகிகளில் இருந்து மஞ்சள் நிற "சாச்சர் ரோச் லைட்டுக்கள்" இரண்டு ஆஸ்பத்திரி மின்சாரத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தன.

நான் மருந்துச் சிட்டையைப் பெற்றுக் கொண்டு தனியார் மருத்துவ விற்பனை நிலையமொன்றை நாடி விரைந்தேன்.

"அண்ணை இந்த "இன்ஜெக்ஸன்" உங்களிட்டை எடுக்கலாமே".

"இது ... இப்ப இஞ்ச வாறயில்லை. யாழ்ப்பா ணத்திலை உதுக்கு சரியான தட்டுப்பாடு..."

என் முகம் ஒரு நிமிடத்தில் சோர்ந்தது. அதை குறிப்பாக அவதானித்துக் கொண்ட அந்தக் கடைக்காரர் "உங்களுக்கு வேணுமெண்டா "உள்ளுக்குளாலை" எடுத்துத் தரலாம். ஆனா விலைதான் கொஞ்சம்கூட வரும்; இஞ்சை ஒரு தரும் உது வெளியாலை விக்கிறயில்லை" மீண்டும் என் முகம் உயிர்த்தது. மயில்த்தாளொன்று கைமாற மருந்து என் கைக்கு வந்தது. பெற்றுக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தேன்.

எனக்காக காத்திருந்த தாதியொருத்தி மருந்தைப் பெற்றுக்கொண்டு விரைந்தாள். மீண்டும் நான் ஆஸ்பத்திரி வராந்தாவை நடையால் அளக்கத் தொடங்கியபோதுதான் வயது முதிர்ந்த அந்த ஆயா என் அருகே வந்து "ஏன் உங்கட ஐயா, அம்மா ஒருதரம் வரமாட்டினமோ?" என்று தன் இரண்டுநாள் சந்தேகத்தை என்னிடம் வெளியிட்டாள்.

"இல்லை அவை வரமாட்டினம் அவைக்கு ஏலாது...."


மொட்டையாக என் பதில் - தெரிந்து சொன்ன பொய் ஆயாவுக்கு என் நிலைமை வளங்கியதோ என்னவோ மேலும் கதையை வளர்க்காது மௌனமாக அவ்விடத்தை விட்டு நகர்கிறாள். மானசீகமாக அவளுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கால்கள் உளைவெடுக்க அருகேயிருந்த நீளமான ஆஸ்பத்திரிக் கதிரையொன்றில் அமர்ந்துகொண்டேன். ஆயா எழுப்பிய கேள்வியால் "சூரிய கந்த"ப் புதைகுழிபோல் என் நினைவுப் புதைகுழிகளும் மெல்ல மெல்ல தோண்டப்படுகின்றன.

தான் ஐயாவுக்கெண்டு எவ்வளவத்தைச் செய்தேன். அவருடைய பாரத்தையும் என்ர தலையிலை போட்டுக்கொண்டு, அட்வான்ஸ் லெவலோடை படிப்புக்கும் தலைமுழுகியிற்று, எங்கேயோ கண்காணாத தேசத்துக்குப் போய், ஆறுவருசமா காய்ஞ்சு, என் கல்யாணத்தைப் பற்றியே கவலைப்படாமல், இரண்டு தங்கைகளையும் கரைசேர்த்து, புதுவீடுகட்டி... கடைசியிலை ஐயா என்னையே தூக்கியெறிஞ்சிட்டார்.

என் மீசை அரும்பிய காலங்களில் நான் விரும்பிய அந்தப் பெண்ணைத்தான் திருமணம் செய்யப் போகிறேன் என்று சொன்னபோதுதான், முதன்முதலாக ஐயாவின் குரல் எனக்கெதிராக எழுந்தது.

"டேய்...உனக்கு என்ன துணிவு... அதுகளின்ர அந்தஸ்த்தென்ன எங்கடை அந்தஸ்த்தென்ன. உன்ர உழைப்பிலைதான் குடும்பம் நடக்குதெண்ட துணிவிலை நீ



எதையும் செய்யலாமெண்டு நினையாதை. ஒழுங்கா நல்ல சீதனத்தோடை நான் பேசுற சம்மந்தத்தைத் தான் நீ செய்ய வேணும். அதை விட்டிட்டு காதல் கீதலெண்டு ஏதாவது கதைச்சியோ நான் இல்லாட்டி நீ வீட்டைவிட்டு வெளிக்கிடவேண்டி வரும்".

ஐயா, எச்சரித்தார். கடைசி நேரத்திலும் என்னை காசுப்பொருளாக்கி ஆதாயம் தேடும் ஆசை அவருக்கு. ஐயாவின் குரலுக்கு அம்மாவும் அடங்கிப்போனாள்.

நானாகவே வீட்டைவிட்டு வெளியேறினேன். எங்கள் திருமணம் எளிமையாகவே நடந்து முடிந்தது-தங்கைகளும், தம்பியும் ஐயாவுக்குத் தெரியாமல் வந்துவிட்டுப் போனார்கள். அம்மாவால்த்தான் வரமுடியவில்லை.

நாங்கள் தனிக் குடித்தனம் அமைத்துக்கொண் டோம். அலுவலகமொன்றில் எனக்கு வேலையொன் றும் கிடைத்தது. சம்பளம் ஏதோ வாழ்க் கைச் செலவுக்குப் போதுமானதாகத்தான் இருந்தது.

ஐயாதான் பொறுப்பில்லாமல் கதைத்துக் கொண்டு திரிந்தார். "அவள் ஏதோ மயக்கிப்போட்டாள். அவர் தன்ர விருப்பத்துக்கு செய்துபோட்டு இப்ப கஷ்டப்படுறாராம். நான் சொன்ன இடத்திலை செய்திருந்தா இப்ப "ராசா" மாதிரி காலுக்கு மேலை கால் போட்டுக் கொண்டிருந்து சாப்பிடலாம்...." ஐயாவின் கதைகளை நான் என்றுமே சாட்டை செய்ததில்லை... சாட்டை செய்யப் போவதுமில்லை. ஐயாவுடனான தொடர்பும் ஆனையிறவுப் பாதையைப்போல் காலப்போக்கில் முற்றாகவே அடைபட்டு போனது.

# ...பிள்ளை

மனைவிதான் கர்ப்பமுற்றிருக்கும்போது அடிக்கடி சொல்லுவாள். பெரியவை எப்பவும் அப்படித்தானப்பா- நீங்கதான் எப்பிடியும் மாமாவை சமாதானப்படுத்தி கூட்டிவர வேணும். எங்களுக்கு குழந்தை பிறந்த உடனே நீங்க கட்டாயம் உங்கட வீட்டை போய் சொல்லவேணும். எனக்காக சொல்ல வேணும்... சொல்லுவியளா?" என்னிடம் அவள் யாசித்தாள். நான் ஒப்புக்கொண்டேன். மனைவியின் ஆசையை நிராசையாக்குவதில் எனக்கு விருப்பமில்லைத்தான்.

நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்த என் மனதுக்கு அவசர செய்தியொன்று வர அது சுத்தரித்துக் கொள்கிறது. நான் இருக்கையைவிட்டு அவசரமாக எழுகிறேன். ஆஸ்பத்திரிக் க்திரைத் துளைக்குள் மறைந்திருந்த மூட்டைப் பூச்சிகளின் கொரில்லாத் தாக்குதலில் என் கணிசமான தொடைப் பகுதி தேசமாகியிருந்தது. பழுப்பேறி, நைந்துபோன என் ரவுசறினூடாக கால்களைத் தடவிப் பார்க்கிறேன். நிறைய இடங்கள் தடித்துப் போயிருந்தன.



பொல்லாத மூட்டைப் பூச்சிகள்தான்... பொருளாதாரத் தடையால் மெலிந்துபோன என் தேகத்திலுமா இரத்தம் குடிக்கவேணும்?

எதிரே ஏதோ சலசலப்பு- பிரசவ அறை வாசல் திரையை ஒதுக்கியவாறே தாதியொருத்தி வருகிறாள்.

"உங்களுக்கு பொம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு" அந்த வசனம் மீண்டும், மீண்டும் எனக்குள் எதிரொலிக்கின்றது. இனம் புரியாத ஏதோ ஒருவகை உணர்வு, ஏமாற்றம், சோர்வு, பெருமூச்சு எல்லாம் என்னுள் வெளிப்படுகிறது.

ஆம்பிளைப் பிள்ளை பிறந்தா எல்லாருக்கும் கற்கண்டு வேண்டிக் குடுக்க வேண்டும் என்ற என் ஆசையெல்லாம் சர்க்கரையாகக் கரைந்து போகிறதே.

சற்றுநேரம் கழித்து என்னைப் பார்ப்பதற்கு அனுமதிக்கிறார்கள். நான் தயக்கத்தோடு உள்ளே செல்கிறேன். மனைவி படுத்திருந்தபடியேதான் தலையை திருப்பி என்னை நோக்குகிறாள். "பிள்ளையின்ர அப்பா வந்திருக்கிறார், அப்பா வந்திருக்கிறார்" ஆயாதான் குழந்தையை வாரி எடுத்து என்னிடம் தருகிறாள். குழந்தை தாயைப்போல நல்ல சிவப்புத்தான்.

எனக்கு கை பதறுகிறது. குழந்தையோ வீரிட்டு அழுகிறது. நன்றாக அழட்டுமேன். இனி இதை வளர்த்து ஆளாக்குவதற்குள் நான் எவ்வளவு அழவேண்டுமா? அதற்கு பரதியுபகாரமாகவேனும் அது அழட்டுமேன்.

ஆயாவிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு மனைவியின் அருகில் செல்கிறேன். ஆயாவின் "டுர்ர்ர்ர....டுர்ர்ர்ர" சத்தத்தில் குழந்தை இன்னும் இன்னும்கூட அழுகிறது.

மனைவி என் முகத்தை கூர்ந்து பார்க்கிறாள். என் முகத்தில் பிரகாசமில்லை என்பதை அறிந்து கொண்டாளோ என்னவோ "ஏனப்பா ஒரு மாதிரியிருக்கிறியள்-பொம்பிளைப் பிள்ளை" பிறந்தது உங்களுக்கு விருப்பமில்லையே" மென்மையான அந்த வார்த்தைகளில் நான் நிலைகுலைகிறேன்.

"சீச்சி....அப்பிடியொண்டுமில்லை" நான்... நான்...சந்தோசமாகத்தானே இருக்கிறன்" என் குரலில் சுரத்தில்லை. இயன்றவரை என்னைக் காட்டிக்கொடுக்காமலிருக்க முயற்சித்தேன்.

சிறிதுநேர மௌனத்தின் பின் அவள் பலவீனமான குரலில் "எப்பிடியும் இண்டைக்கே உங்கட வீட்டைப்போய் மாமாக்கும், மாமிக்கும் பொம்பிளைப் பிள்ளை பிறந்ததெண்டு சொல்லிப் பொடுங்கோ" என்றாள். மனைவியின் எதிர்பாராத இந்த நாகாஸ்திரத்துக்கு கட்டுப்பட்டு வேறுவழியின்றி தலையசைத்தேன் - குழந்தையைப் பரிசோதிப்பதற்கு டாக்டர் ஒருவர் வரவும் நான் மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேறவும் சரியாகவிருந்தது.

சைக்கிள் பாதுகாப்பு நிலையம்- சில்லறை இல்லாது பத்துரூபாய்த் தாளை நீட்டுகிறேன். மீதி எட்டுரூபாவும் சில்லறைகளாக சேட் பொக்கற்றுக்குள் புகுந்து கொள்கின்றன. மனதைப் போலவே அந்தச் சில்லறைகளும் கனக்கிறது.

வீட்டை எப்பிடியும் போகத்தான் வேண்டும். மனைவி சொல்லிவிட்டாள். ஊருக்குள் போனால் இனி எல்லோரும் கேட்பார்கள். அவர்களுக்கு பதில் சொல்லும் தைரியம் இப்போ என்னிடம் இல்லைத்தான். என் மனக்களத்தில் பல போராட்டங்கள் - நடந்து முடிந்த பூநகரிச் சமர் போல என் குழந்தையின் எதிர்காலம்... பெண் என்றாலேயே எப்போதும் ஈனப்பார்வை பார்க்கும் இந்தச் சமூதாயம். இந்த ஈரூடகத் தாக்குதல்களையும் எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ! என் அடிவயிற்றில் ஒரு கலக்கம்.

சைக்கிள் தன்பாட்டுக்கு பள்ளந்திட்டிகளில் ஏறி இறங்கிப் போய்க் கொண்டிருந்தது. எப்படியோ ஊருக்குப் போயச் சேர இன்னும் ஒரு மணித்தியாலம் பிடிக்கும். அதற்கிடையில் யாரையுமே சந்தித்துவிடக்கூடாது என்று நேர்த்தி வைத்துக் கொண்டு சைக்கிளை உழக்கினேன்.

எது எப்படியிருந்தாலும் என்னைச் சந்திப்பவர்களுக்கு "ரொபி" குடுத்து என் "மகிழ்ச்சியை" தெரிவிக்க வேண்டுமே. அந்தச் சம்பிரதாயத்தை மீற விரும்பாது வீதியோரக் கடையொன்றில் சைக்கிளை நிறுத்துகிறேன்.

கடையில் ஏதோ பொருட்களை அவசர அவசரமாகப் பொதி செய்து கொண்டிருக்கிறார்கள். முதலாளி என்று கணிக்கத் தக்க "பெரிய மனிதர்" ஒருவர் யாரையோ பேசிக் கொண்டிருக்கிறார். டேய்....இஞ்சைவா, இதார் கட்டினது. பெட்டைக்கட்டு கட்டியருக்கிறியள். இந்தா அவிட்டுப் போட்டு திப்பிக்கட்டு.

எனக்கு சுள்ளிட்டது.

பெட்டைக்கட்டு... ஆம் பெட்டைக்கட்டு எண்டுதான் சொன்னார். பெண்களுக்கு இந்தச் சமூகம் தரும் மதிப்பு இவ்வளவு தானா? சோர்வுடன் திரும்பவும் சைக்கிளை உழக்கிறேன். எனக்கு ஏன்தான் இப்படியானதோ? இது பொம்பிளைப் பிள்ளையளுக்கு பெற்றோராகும் எல்லோரிடத்தும் தொற்றிக்கொள்ளும் வியாதிதானோ? எனக்குப் புரியவில்லை.

ஊர் நெருங்க நெருங்க என் விரக்தியும் அதிகரிக்கிறது. பேசாமல் ஊருக்கு போகாமலே திரும்பி விடுவோமோ என யோசிக்கிறேன்.

திடீரெனத் தேகம் குளிர்கிறது. இரண்டு மூன்று நீர்த்திவலைகளை அன்பளிப்புச் செய்த வானம் "உஸ்ஸ்ஸ்..." என இரைந்தபடி...மழை! மழை! இதுவும் எதிர்பாராததுதான்.

மற்றவர்களைப் போல் நானும் வீதியோர வீட்டுத் தாவரமொன்றுக்குள் ஒதுங்கிக் கொள்கிறேன். மழைத்துளிகள் மண்ணை முத்தமிடுகின்றன. எனக்குள் ஏதோவொருவகை குளிர்ச்சி, உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை வியாபிப்பதை உணர்கிறேன்.

வீட்டுக்குள் தாயொருத்தியின் பேச்சுக் குரல் கேட்கிறது. "தம்பி உனக்கெத்தினை தரம் சொல்லிறது. ஒருக்காச் சொன்னாக் கேளேன். பெட்டை நாய்க்குட்டையைக் கொண்டந்து கொஞ்சிக் கொண்டிருக்கிறாய்- கடுவனெண்டாலும் பரவாயில்லை. உதென்ன கறுமத்துக்கு. உதைக் கொண்டுபோய் முதல் வெளியிலைவிடு."

தம்பியின் சிணுங்கல் அதை மறுக்கிறது.

"இப்ப அப்பாட்டைச் சொல்லிறதே" தம்பியின் சிணுங்கல் மெல்ல அடங்கிப் போகிறது. தொடர்ந்து, நாய்க் குட்டியின் அவலக் குரல். வாசல்க் கதவு திறக்கப்பட்டு நாய்க் குட்டி வெளியேற்றப்படுகிறது.

வெளியே விடப்பட்ட அந்த நாய்க் குட்டி சுற்றுமுற்றும் மிரள மிரளப் பார்க்கிறது. பிறகு என்னை நோக்கி குடுகுடென ஓடிவருகிறது. நான் "அடீக்...அடீக்...." என்றவாறு காலைத் தூக்குகிறேன். பிறகு அதற்காக நிறையவே வருத்தப்படுகிறேன். உண்மையிலேயே எனக்கு இந்த நாய், பூனையை தொடுவதெண்டால் ஒரு "அரிகண்டம்" அது என் சுபாவமோ என்னவோ முந்தித் தொடக்கம் நான் அப்படித்தான்.

ஓடி வந்த அந்த நாய்க்குட்டி அப்படியே நின்று என்னைப் பரிதாபமாகப் பார்க்கிறது. "உனக்கும் பொம்பிளைப் பிள்ளைதானே பிறந்தது" என்கிற மாதிரியிருந்தது அதன் பார்வை. பிறகு மெல்ல மெல்ல வந்து என் கால்களுக்கிடையில் ஓட்டிக் கொள்கிறது. நான் அதைத் தடுக்கவில்லை.

மழை இப்போ கொஞ்சம் குறைந்திருந்த மாதிரியிருந்த்து. ஆனாலும், விட்டுவிட்டது என்று சொல்ல முடியாதளவு பெய்து கொண்டு தானிருந்தது. குடையுள்ளவர்கள் மட்டும் வீதிகளில் பிரவேசித்தார்கள். நான் மழை முற்றாக விடுமட்டும் காத்திருந்தேன்.

வீதியில் பெண்ணொருத்தி மழையை அலட்சியப்படுத்திவிட்டு நனைந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

"சே...என்ன பெண்ணிவள் ஒற்றைக் கையால் இவ்வளவ அசட்டையாக சைக்கிள் ஓட்டி வருகிறாளே"-அவள் கிட்ட வந்தபோதுதான் என் கணிப்பு தவறு என்பதை உணர்ந்தேன். அவள் ஒரு விடுதலைப் போராளி என்பதை அறிந்தபோது உன்னையறியாமலேயே எனக்குள் ஒரு மரியாதை.

அவளது இடதுகை இருக்க வேண்டிய இடம் வெறுமையாக இருந்தது. மண் மீட்புப் போரில் அவள் கையைத்தான் இழந்திருந்தாளேதவிர நம்பிக்கையை அல்ல என்பதை அவளது தீர்க்க மான விழிகள் உணர்த்தின. குண்டு விழுந்தாலும் குலையாத அந்த முகம். நான் கண்களை அகற்றாமல் அவளையே ஆழமாக பார்த்தேன்.

எனக்குள் ஒரு நெருடல்....இவளும் ஒரு பெண்தானே! சீருடை அணிந்து இந்தச் சமூகத்தில் தலைநிமிர்ந்து செல்கிறாளே! எப்படி? பெண்களை மதிக்காத இந்தச் சமுதாயம் இவளை மட்டும் எப்படி அனுமதித்தது. ஆண்களுடைய சைக்கிளை ஒற்றைக் கையால் செலுத்துமளவுக்கு ஆன்ம சக்தி இவளுக்கு எங்கிருந்துதான் வந்தது.

சாவைக் கழுத்திலே காவத் துணிந்து விட்ட வளுக்கு இதொன்றும் பெரிய காரியமில்லையே.

அவள் முன் நான்தான் எவ்வளவு தோற்று விட்டேன். என் கோழைத்தனத்தை எண்ணி நானே வெட்கப்பட்டுக் கொண்டேன். உறுதியுடன் சைக்கிளை பற்றுகிறேன். கால்களிலோ புது உற்சாகம். "எனக்குப் பொம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு... பொம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கு..." இந்த உலகத்துக்கே கேட்கும்படி உரத்துக் கத்த வேண்டும்போலிருந்தது.

இதுவரை என்னுடன் ஒட்டிக்கொண்டிருந்த அந்த நாய்க்குட்டி "என்னைவிட்டு விட்டுப் போகிறாயா? என்பதுபோல் பரிதாபமாக என்னைப் பின்தொடர்ந்து ஓடிவந்தது. நான் குனிந்து கைகளால் அதைவாரி எடுத்துக் கொண்டு சைக்கிளை அவதானமாகச் செலுத்தத் தொடங்குகிறேன். மழை எனக்கு விலகி வழிவிடுகிறது. வீதியில் செல்பவர்கள்தான் என்னை வேடிக்கையாகப் பார்க்கிறார்கள். நன்றாகப் பார்க்கட்டுமேன். ●

■யோகேந்திரநாதன்

# அதிகார பீடங்களை அலற வைத்த அருந்ததிராய்



கொடிய பயங்கரவாதிகள் எனவும் சீனாவின் கையாட்களாக இந்திய ஜனநாயகத்துக்கு எதிராகப் போர் தொடுத்துள்ள தேச விரோதிகள் எனவும் இந்திய மக்களிடமும் சர்வதேச அளவிலும் இந்திய அரசும், வலதுசாரி அரசியல்வாதிகளும் தீவிரமான முறையில் இந்திய மாவோயிஸ்ட்கள் பற்றிய பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர். அவர்கள் கொடூரமான கொலைகளைப் புரிபவர்கள் எனவும், மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்கள் எனவும், பெண்களைக் கடத்திச் சென்று போராட்டத்தில் இணைப்பவர்கள் எனவும் பிரபல ஊடகங்கள் போலியான புகைப்படங்களுடன் பரப்புரைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில்தான் இந்திய இராணுவமோ, சிறப்புப் பொலிஸ் படையோ கால் வைக்க முடியாதிருந்த ஒரிசாவின் மாவோயிஸ்ட்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் துணிச்சலுடன் சென்றார் அருந்ததிராய். அரசின் உளவாளி எனச் சந்தேகிக்கப்படக்கூடிய அபாயம் இருந்தபோதிலும் உயிராபத்தையும் பொருட்படுத்தாது அவர் களமிறங்கி மிகுந்த சிரமங்களின் பின் போராளிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பல உண்மைகளைக் கண்டறிந்தார். குறிப்பாக அவர்கள் பயங்கரவாதிகள் அல்லவென்பதையும், சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான தன்னலமற்ற போராளிகள் அவர்கள் என்பதையும் தெளிவாகவே புரிந்துகொண்டார்.

மாவோயிஸ்ட்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களையும் சொந்தமாக வைத்து மக்களைப் பரம்பரை பரம்பரையாகக் கொத்தடிமைகளாக வைத்துக் கடுமையாக வேலை வாங்குவதும், கடும் வட்டி மூலம் சிறு விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்படுவதும், மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் வாடுவதும் என்றிருந்த நிலச்சுவான்தார்களின் அதிகாரம் முற்றாகவே பறிக்கப்பட்டிருந்தது. பண்ணையடிமைகள் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன், நிலச்சுவான்தார்களின் காணிகள் பறிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டன. வட்டிப் பணத்துக்காக விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்கு மீளளிக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் விடுதலைப் பிரதேசங்களைச் சுற்றிவளைக்கும்போது போராளிகள் காடுகளுக்குப் பின் வாங்கி விடுவார்கள். இச் சந்தர்ப்பத்தைப் பாவித்து படையினர் ஏழை விவசாயிகளைச் சுட்டுக் கொன்று விட்டும், பெண்கள், சிறுமியரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்துவிட்டுப் பிரேதங்களைப் படம் பிடித்து பத்திரிகைகளில் மாவோ வாதிகள் செய்ததாகப் பரப்புரை செய்தனர்.

இவற்றை எல்லாம் நேரில் கண்டும், சம்பந்தப்பட்ட மக்களிடம் கேட்டறிந்தும் வந்த அருந்திராய் உண்மைகளை அம்பலப்படுத்தி இந்திய அரசைத் திணற வைத்தார். இவரது கட்டுரைகள் பேட்டிகள் என்பன இந்திய இராணுவம் பற்றி மக்கள் கொண்டிருந்த மாயையைக் கிழந்தெறிந்தன. பெண் அடிமைத்தனம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அமெரிக்காவின் உலக மேலாதிக்கம், அணு ஆயுத எதிர்ப்பு, மனித உரிமைகள் என்பன தொடர்பாக இவரின் நடவடிக்கைகள் வலிமையான எதிர்ப்புக் குரலாக விளங்குகின்றன.

நர்மதை அணை அபிவிருத்தி என்ற பேரில் அரிய வகை மரங்களையும், மூலிகைகளையும் கொண்ட வனப்பகுதி அழிக்கப்படுவதற்கு எதிராக இவர் நடத்திய போராட்டம் காத்திரமானது.

அம்மரங்களை வெட்ட வன இலாகா வந்தபோது அருந்ததிராய் தலைமையில் மலை தொகுதிப் பெண்கள் உட்பட மகளிர் அமைப்புகள் மரங்களை வெட்டவிடாது கட்டிப்பிடித்துப் போராட்டம் நடத்தினர்.

அதேபோன்று கஷ்மீர் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகவும் இவர் துணிச்சலுடன் குரல் கொடுத்தார். இந்திய நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் தூக்கிலிடப்பட்ட அப்சல்குரு மரண தண்டனை தொடர்பாக அவர் எழும்பி 13 கேள்விகளுக்கு இந்திய அரசோ அல்லது இந்திய தேசபக்தர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்பவர்களோ பதிலளிக்கவில்லை.

2011ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் "அல்குவைதா" தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதைச் சாட்டாக வைத்த அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்தமையைக் கண்டித்து இவர் நியூயோர்க் நகரில் ஆற்றிய துணிச்சலான உரை சர்வதேச அளவில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு முகத்தை வெளிக் கொண்டு வருவதில் காத்திரமான பங்கை வகித்தது.

இவர் அநீதிகளுக்கு எதிராகப் பல நூல்களை வெளியிட்டிருந் தார். அவற்றில் "தி கோட் ஒவ் ஸ்மோல் திங்ஸ்" (The God of Small Things) என்ற நூல் இவருக்குப் "புக்கர்" பரிசைப் பெற்றுக் கொடுத்ததுடன், முதன் முதல் "புக்கர்" பரிசு பெற்ற இந்தியர் என்ற பெருமையையும் சேர்ந்தது.

இவருக்கு 2004 இல் சிட்னி அமைதிப் பரிசும் 2015இல் அம்பேத்கார் சுடர் விருதும் வழங்கப்பட்டன. 2003இல் இவருக்கு இந்திய அரசால் வழங்கப்பட்ட சிறந்த திரைக்கதை ஆசிரியருக்கான தேசிய சாகித்திய அக்கடமி விருதை "மாடுகளைப்போல் மனிதர்களை கொல்வதற்கான என்னால் முடிந்த எதிர்ப்பு, எனக்கூறி அதை வாங்க மறுத்துவிட்டார். இன்று வரை எவ்வித பின்விளைவுகளுக்கு அஞ்சாமல் அநீதிகளுக்கு எதிராகப் போரிடும் ஜனநாயகப் போராளியாக விளங்கி வருகிறார்.

இலங்கையிலும் விவியன் குணரத்தின, குமாரி ஜெயவர்த்தன போன்ற பெண் புத்திஜீவிகள் உழைக்கும் மக்களின் உரிமைகள் பெண்கள் விடுதலை தொடர்பாக பல போராட்டங்களை நடத்தியதுடன் பல நூல்களையும் எழுதியுள்ளனர். குமாரி ஜெயவர்த்தன அவர்கள் இனவாத அடிப்படையில் வரலாற்றைத் திரிபுபடுத்தும் முயற்சிகளுக்கு எதிராகக் காத்திரமான போராட்டங்களை நடத்தியதுடன், அதுபற்றி "ஓயாத கிளர்ச்சி அலைகள்" என்ற ஒரு நூலையும் வெளியிட்டுள்ளார். போர்க் காலத்தில் அவர் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்கு பயணம் செய்ததுடன் விடுதலைப் போராட்டத்தில் நியாயங்களை சிங்கள மக்கள மத்தியில் கொண்டு செல்வதில் கடும் முயற்சிகளை மேற்கொண்டன.

எனினும் இவர்கள் அருந்ததி ராய் போன்ற சர்வதேச அளவில் அங்கீகாரம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அனாலும் அவர்களின் பங்களிப்புக்கள் பெறுமதிமிக்கவை என்பதை மறுக்கமுடியாது.

# விண்ணை ஆண்ட பெண் கல்பனா சாவ்லா



■ காவலூர் ஞானம்

குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டுபவர்கள் அல்லர் இன்றை இன்றைய பெண்கள். அவர்கள் உலகம் நன்றாகவே விரிந்து விட்டது. உன்னை விட நான் எந்த விதத்திலும் சளைத்தவளல்ல என்பதுபோல, பெண்கள் ஆண்களைப் போல - ஆண்களையும் விட பல துறைகளிலும் பிரகாசிக்கத் தொடங்கி விட்டார்கள். உடலமைப்பில் அவர்கள் பலவீனமானவர்களாக இருக்கலாம். ஆனால் மனோபலம் அவர்களிடம் நிறையவே இருக்கின்றது. ஆண்களை விட பொறுமையும் அதிகம் இருக்கின்றது. அழகால் ஆணை மயக்குபவள் பெண் என்ற பூச்சைக் களைந்து, அறிவு சாதுரியத்தால் ஆண்களைக் கவரும் பெண்களாக மாறிவருகின்றார்கள். அடுக்களைக்குரியவள், அடக்கி ஆளப்பட வேண்டியவள் என்றெல்லாம் சொல்லப்பட்டவள், இன்று அரிய பெரிய சாதனைக்குரியவளாக மாறிவருகிறாள்.

விண்வெளித் துறையைக்கூடப் பெண்கள் விட்டு வைக்கவில்லை. விமானப் பணிப்பெண்களாக வலம் வந்தவர்கள் இன்று விமான ஓட்டிகள், விண்வெளி வீரர்கள் என்று படி தாண்டியிருக்கின்றார்கள். இந்திய அமெரிக்க விண்வெளி வீரரான கல்பனா சாவ்லா இங்கே தனித்துவம் பெறுகிறார். முதல் பெண் இந்திய விண்வெளிவீரர் என்ற பெருமை இவருக்கே உரியது. 1997ஆம் ஆண்டு கொலம்பியா என்னும் விண்கலத்தில், விண்வெளிக்கு பயணத்தை மேற்கொண்டவர் இவர். இவருடன் கூடவே பயணித்தவர்கள் ஏழு பேர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட ஒரு விபத்து, இவர் உயிரைக் குடித்து விட்டது.

வீட்டார் இவர் தேர்ந்தெடுத்த விண்வெளித் துறையை விரும்பவில்லை. ஆனால் முன்வைத்த காலை பின் வைக்கவில்லை சாவ்லா. இவரது தந்தை வர்த்தகத் துறையில் பிரகாசித்தவர். மிகக் கடுமையாக உழைத்து, வாழ்வின் உச்சத்தைத் தொட்டவர். ஒரு நிறுவனத்தின் முதலாளியாக தன் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டவர்.

இதே மாதம் 17ஆம் திகதி, ஆனால் 1961இல், பிறந்தவருக்கு சுனிதா, தீபா, சஞ்சய் என்று மூன்று சகோதரர்கள் இருந்துள்ளார்கள். இவர் இளம் வயதில் படிப்பில் புலியாக இருந்தார் என்று சொல்வதற்கில்லை. இளவயது கல்பனாவுக்கும், அவளது சகோதரன் சஞ்சைக்கும் விமானத்தில் பறக்கும் ஆசை தொற்றிக் கொண்டது. எனவே இதற்காகவே பிரத்தியேகமாக இயங்கிய விமானப் பறப்பு மையமொன்றில், இருவருமே அங்கத்தவர்களாக இணைந்து கொண்டார்கள்.

வகுப்பறையில் தன் கனவு ஒரு விண்வெளி வீராங்கனையாவதுதான் என்று கல்பனா சொல்லும்போதெல்லாம், அவரது பேராசிரியரோ, சக மாணவிகளோ இதைப் பெரிதுபடுத்துவதில்லை. இது குறித்து கல்பனாவை சக மாணவிகள் கேலி செய்வதுண்டு. ஆனால் கல்பனா மனம் சோர்ந்து விடவில்லை. நான் ஏனைய பெண்களைப் போன்று வாழ்ந்து மடியமாட்டேன். இதுவரை எந்தப் பெண்ணும் சாதித்திராத ஒன்றைச் சாதித்துக் காட்டுவேன் என்று மனதுள் சூளுரைத்துக் கொண்டாள் கல்பனா.

பொறியியல் பட்டதாரியாக பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்டு, அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தில் முதுகலை விண்வெளிப் பொறியியல் படிப்பை முடித்துக் கொண்டார். எண்பதுகளில் இவர் அமெரிக்க பிரஜையாகினார். 1988இல் கொலராடோ பல்கலை விண்வெளி ஆய்வுப் பொறியியலில் முனைவர் பட்டம் பெற்றார். இவருக்கு நல்லதொரு வழிகாட்டியாக டான் வில்சன் என்ற அமெரிக்கர் இருந்துள்ளார்.

"கல்பனா கூச்ச சுபாவம் கொண்டவராகவும், அமைதியானவராகவும் இருந்தார். ஆனால் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற போராட்ட குணம் அவரிடமிருந்தது. விண்வெளி வீராங்கனையாக வேண்டும் என்ற தாகம் இவரிடம் இருந்ததால், இவர் நிச்சயம் ஒரு விண்வெளி வீராங்களையாகப் பிரகாசிப்பார் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்தது" என்று வில்சன் கூறியிருக்கின்றார்.

1993ஆம் ஆண்டில் கலிபோர்னியாவிலுள்ள ஓர் ஆய்வு நிலையத்தில் இணைந்தது. இவர் வாழ்வின் ஒரு மைல்கல்லாக அமைந்தது. சளைக்காத பல்வேறு விமானப் பயிற்சிகள், போராட்டங்களின் பின்னர்,1995 மார்ச்சில் நாசா விண்வெளிக் குழு, விண்வெளிப் பயிற்சிக்காக கல்பனாவைத் தேர்வு செய்தது.

1996இல் முதல் விண்வெளி ஆய்வுப் பயணம் மேற்கொள்ள அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டது. 1997, நவ., 10 இல் தனது முதல் விண்வெளிப் பயணத்தைத் "கொலம்பியா -எஸ்.டி.எஸ்." என்ற விண்கலம் மூலம் தொடங்கினார். இவரையும் சேர்த்து 6 பேர் பயணம் செய்தனர். 252 முறை பூமியை சுற்றி வந்தார். பயண தூரம் 10.67 மில்லியன் கி.மீ., பயண நேரம் 376 மணி 32 நிமிடமாகும். இப்பயணம் மூலம் 54 மில்லியன் டொலர் மதிப்புடைய இயற்பியல் சோதனைகள் விண்வெளியில் நடத்தப்பட்டன.



இப்பயணம் அவருக்கு, விண்வெளி பயணம் மேற்கொண்ட முதல் இந்திய பெண் என்றும், இரண்டாவது இந்தியர் என்ற இரண்டு பெருமையும் ஒரே நேரத்தில் பெற்றுத்தந்தது. இவருக்கு முன்னதாக, ராகேஷ் சர்மா என்ற இந்தியர் 1984இல் ரஷ்ய உதவியுடன் விண்வெளிக்கு சென்று வந்திருந்தார். மறுபடியும் ஆய்வுக்காக கல்பனா சாவ்லாவை விண்வெளிக்கு அனுப்புவதற்கு நாசா தயாராகியது. பொதுவாக ரொக்கெட்டில் பயணிப்பதை, இயல்பான தனது சுபாவங்களில் ஒன்றாகக் கருதிய கல்பனா, இதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டார். அதன்படி, 2003 இல் மறுபடியும் கொலம்பியா விண்கலத்தில் புறப்பட்டார்.

பெப்ரவரி முதலாம் நாள் அவர் பயணித்த கொலம்பியா விண்கலம் ஆய்வுகளை முடித்து பூமிக்கு வந்து கொண்டிருந்தபோது, விண்கல கழிவுத் தொட்டியிலிருந்த கழிவுகள் எதிர்பாராத விதமாக விண்கல இறக்கைகளில் உக்கிரமாக மோதியதாலும், தீ காப்புப் பொருள் விழுந்ததில், இறக்கையை சுற்றி பின்னப்பட்ட வெப்பத்தடை வளையங்கள் சிதைத்து விட்டதாலும் நிலை தடுமாறி நடுவானில் வெடித்துச் சிதறியது. கல்பனாவின் உயிருடன், அவரோடு பயணித்த மற்ற ஆறு வீரர்களும் உயிரிழந்தனர். அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநில வான்பரப்பில்தான் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இது உலகத்தையே உறைய வைத்ததுடன், ஒட்டு மொத்த மனித குலத்தையே கதறவும் வைத்தது.

இவரை உலகம் மறக்கவில்லை. நியூயோர்க் நகரில் உள்ள ஒரு தெருவுக்கு "கல்பனா வே" என்று பெயரிட்டுள்ளார்கள். 2004ஆம் ஆண்டிலிருந்து இளம் பெண் விஞ்ஞானிகளை ஊக்குவிக்க, இந்திய மாநிலமான கர்நாடக அரசு "கல்பனா சாவ்லா விருதினை" வழங்கிவருகின்றது. இந்தி நடிகை பிரியங்கா சோப்ராவை வைத்து, கல்பனாவின் வாழ்க்கைச் சரிதத்தை, திரைப்படமாக்கும் முயற்சி இடம்பெறுவதாகப் பேசப்பட்டது. இது வெறும் வதந்தியாகவே இன்றுவரை இருக்கின்றது.

ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவுவதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர் கல்பனா. இறப்பதற்கு முன் இறுதியாக விண்வெளி பயணத்தை தொடங்குவதற்கு முன், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ப்ளோரா என்ற ஏழை மாணவியின் படிப்பு செலவுகளுக்கு பணம் அனுப்பிருந்தார். அவர் மரித்துப் போகவில்லை. இளைய சமுதாயத்தின் இதயங்களில் விண்வெளி கனவை விதைத்துப் போயிருக்கிறார். அந்த வித்திலிருந்து ஆயிரமாயிரமாய் "கல்பனா சாவ்லாக்கள்" அக்கினிக் குஞ்சுகளாய்ப் பிறப்பார்கள். விண் அளக்கப் பறப்பார்கள். ●

# சூரியோதயத்துக்கு பின் தூங்காதீர்கள்



தினமும் சூரிய உதயத்துக்கு முன்னதாக எழ வேண்டும் என்கிறார்கள் ஆச்சாரியப் பெருமக்கள். ஏன்... எதற்காக?

வேத காலக் கடவுள் சூரிய பகவான் என்கின்றன ஞானநூல்கள். உலகுக்கு வெளிச்சம் தருவதுடன் இரவு-பகலையும் உருவாக்குகிறார். உடலுக்கு சக்தியையும் தருகிறார். பலத்தையும் வழங்குகிறார் சூரியக் கடவுள்.

சூரியன் ஏழு குதிரை களைப் பூட்டிய தேரில் வருகிறார். சூரியக் கடவுளை விட அதிக சக்தி உள்ள தெய்வம் இல்லை எனும் அளவுக்கு வலிமை பெற்றவர் அவர்.

சூரியன் எழுவதற்குரிய அறிகுறிகள் தெரிந்ததுமே பறவைகளும், மிருகங்களும் தங்கள் கடமையைத் தொடங்கி விடுகின்றன. ஆனால் மனிதர்களில் முக்கால்வாசிப் பேர் சூரியனின் வருகைக்குப் பிறகும் தூங்குகிற பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். சூரியனுக்கு மரியாதை கொடுக்காததால், அவர் தரும் இயற்கைச் சீற்றங்களைத் தாங்க முடியாமல் தவிக்கின்றனர்.

அதிகாலையில் எழுந்து சூரியனை வரவேற்க எல்லோரும் தயாராக வேண்டும். அப்படி செய்தால் இயற்கை சீற்றம் வர வாய்ப்பே இல்லை என்கிறது ரிக் வேதம்.

சூரியோதயத்துக்கு முன்பாக வானத்தில் பொன்னிறம் ஜொலிக்கும். இதுபோன்று தங்க நிறத்தில் வானம் ஜொலித்தால் அனைவரும் எழுந்து விட வேண்டும் எனப் பொருள்.

அதிகாலையில் எழும் பழக்கம் உடையவர்கள் மிக அதிக சக்தி பெறுவதுடன் நேர் வழியில் நடக்கிறார்கள் என்பதும் ரிக் வேதத்தின் கணக்கீடாக சொல்லப்பட்டிருக்கிறது. சூரியோதயத்துக்குப் பின்னும் தூங்கிக் கொண்டி ருக்காதீர்கள். அது உடல், மன ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல!

எனவே சூரியோதயத்துக்கு முன் எழுவோம். அதிக சக்தியையும் ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் பெறுவோம். ஞானத்தில் சிறந்து விளங்குவோம். புத்தி சாதுரியத்துடன் வாழ்வோம்.



# தவறின்றேல் பயம் எதற்கு?

உமர் (ரலி) தெருவில் வருகிறார் என்றாலே, ஊரே நடுங்கும். தலைவர்கள்கூட அவருக்கு அஞ்சுவார்கள். சிறுவர்கள் அவர் வருவதை அறிந்தால், விழுந்தடித்து ஓடி விடுவார்கள். அவர் மிகவும் நல்லவர். ஆனால், முன்கோபக்காரர். தவறுகளைக் கண்டிப்பவர்.

ஒருமுறை, அவர் தெருவில் வருவதை அறிந்த சிறுவர்கள், "உமர் வருகிறார்! ஓடி விடலாம்," என்று சிட்டாய் பறந்தார்கள். ஆனால், ஒரு சிறுவன் மட்டும் அவரைக் கண்டு அஞ்சவில்லை. தைரியமாக தெருவில் நின்றான்.

உமர் மிகுந்த தோரணையுடன் சிறுவனை நெருங்கினார்கள். 'ஏனப்பா! உன் நண்பர்கள் எல்லாம் என்னைக் கண்டு ஓடி விட்டார்கள். நீ மட்டும் தைரியமாய் நிற்கிறாயே! பயமில்லையா?" என்று கேட்டார்கள்.

'ஐயா! ஏன் இந்தத்தெரு அகலமாகத்தானே இருக்கிறது. நான் வழிவிட்டால்தான், நீங்கள் போகும் அளவுக்கு குறுகியிருக்கிறதா என்ன! அது மட்டுமல்ல, உங்களைக் கண்டு பயந்து ஓடும் அளவுக்கு, நான் தவறேதும் செய்ய வில்லையே!" என்று திருப்பிக் கேட்டான் சிறுவன்.

சிறுவனின் தைரியமான பதில் உமர் (ரலி) அவர்களைக் கவர்ந்தது. அவனை பாராட்டினார்கள். அந்த சிறுவன் தான், பிற்காலத்தில் 'அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) என்ற மாபெரும் வீரராகத் திகழ்ந்தவர்.

குழந்தைகள் தைரியமாக இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா!

# மறைவான தர்மமும் கடவுளுக்குத் தெரியும்

தவக்காலத்தில் கிறிஸ்தவ மக்கள் ஐந்து முக்கிய செயல்களில் கவனம் செலுத்துவார்கள். அவை, தர்மம், ஜெபம், நோன்பு, மனம் வருந்துதல், மனம் மாறுதல். இந்தச் செயல்கள் தனிமனிதர் ஒருவரை இறைவனிடம் மீண்டும் அழைத்துச் செல்ல உதவுகின்றன.

தர்மம் செய்வது இறைவனிடமிருந்து வரும் ஓர் அற்புத மதிப்பீடு. இருப்பதை இல்லாதவரோடு பகிர்ந்துகொள்வது காலத்தின் கட்டாயமாகவும் இருக்கிறது. தர்மம் செய்வதைப் பற்றி இயேசு உங்களது வலது கை செய்வது உங்களின் இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும். மறைவாகச் செய்யும் தர்மம் பற்றி கடவுளுக்குத் தெரியவரும்" என்று கூறுகிறார். இன்றைய நவீன உலகில் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ளவும், தர்மம் செய்யவும் தயாராக இல்லை. அப்படியே தர்மம் செய்தாலும், அதைப் பற்றி தம்பட்டம் அடிப்ப வர்களாகவே நாம் இருக்கிறோம்.

'பசியோடு இருப்பவருக்கு உணவும், நோயுற்றோருக்கு ஆறுதல் அளிப்பதும்' தர்மம் செய்வதையே குறிக்கிறது. தன்னுடைய தனிப்பட்ட திறமைகளை திறமை இல்லாதவர்களுடன் பகிர்ந்துகொள்வதும் ஒருவிதமான பகிர்தலே. எனவே, ஏழைக்குச் செய்யும் எந்தவொரு சிறு உதவியும், அது கடவுளுக்கே செய்த உதவியாகவே கருதப்படும்.



மனம் மாறுதல் என்பது இந்த தவக்காலத்தில் ஏற்படுகிற முக்கியமான நேர்மறைத் தாக்கம். நான் மனம் மாறிவிட்டேன் என்று கடவுளிடம் மார்தட்டிக் கூறுவதற்கல்ல. அதைச் செயற்பாடுகளில் காட்ட வேண்டும். அன்பு செய்வதிலிருந்து தவறி வெகுதொலைவு சென்றிருந்தால், அன்பைச் செயல்களில் காட்ட வேண்டும். மன்னிக்க முடியாமல் இறுமாப்புடன் இருந்தால் அதிலிருந்து மாறி மற்றவர்களை மன்னிக்கத் தயாராக இருக்க வேண்டும். இதைத்தான் இயேசு, "பழியை அல்ல நான் இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று கூறுகிறார். 'எனக்கு காணிக்கை செலுத்த வரும்போது, உன் சகோதர சகோதரிகளோடு மனத்தாங்கல் இருந்தால், அதை முதலில் சரி செய்துவிட்டு பின்னர் வந்து காணிக்கை செலுத்து" என்று கூறுகிறார். எனவே, மனம் மாறுதல் என்பது சகமனிதரோடும், இயற்கையோடும் ஒப்புரவாக வேண்டும். அப்போதுதான் இறைவனோடு உள்ள உறவு பூப்போல மலரும். இதைத்தான் தவக்காலம் நமக்கு உணர்த்துகிறது.

■ ஜெயராணி




பெரும்பாலும் குழந்தைகள் தாங்கள் எதிர்கொள்ளும் பாலியல் கொடுமைகள் பற்றி வெளியில் சொல்வதில்லை. நடந்த குற்றத்தில் தனக்கும் பங்கிருப்பதாக அவர்கள் நினைத்துக்கொள்ளத் தகுதியான வகையில் நாம் நடந்து கொள்கிறோம். பெற்றோர்கள் குழந்தைகளின் முறைப்பாட்டை மரியாதைக்குரிய தமது குடும்ப உறுப்பினரின் கௌரவத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலாகக் கருதி, பாதிக்கப்பட்ட குழந்தையையே குற்றவாளியாக உணர வைக்கின்றனர். குழந்தைகள் எப்போதும் உண்மையையே பேசுகின்றன. அந்த உண்மைகள் நம் மீதான தாக்குதலாக இருப்பதால் நாம் அவற்றைப் புறக்கணிக்கிறோம்.

'இதெல்லாம் விழிப்புணர்வு இல்லாத காலத்தில நடந்திருக்கும். இப்போது நிலைமை ரொம்ப மாறிடுச்சு. பெற்றோர் ரொம்ப கவனமா இருக்கிறாங்க" என்று யாராவது சொல்வீர்களானால், உங்களுக்குச் சில புள்ளி விவரங்களையும் சம்பவங்களையும் எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகளாவிய ரீதியில் ஐந்துக்கு ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர். கண்களுக்குள் வைத்துப் பிள்ளைகளை வளர்க்கிறோம். பின் எப்படி அவர்கள் பாலியல் தாக்குதலுக்கு ஆளாக முடியும்? இதற்கான கொடூரமான பதில் என்னவெனில் அக்குற்றத்தை நிகழ்த்துகிறவர்கள் நம் நம்பிக்கைக்கு உட்பட்ட, மிகவும் நெருக்கமானவர்கள் என்பதே! உறவினர்களால் இத்தகைய கொடுமைகள் நடந்தால், பெற்றோர் அதை அமைதியாக விட்டுவிடுகின்றனர். குறைந்தபட்சம் அந்த நபரை எச்சரிக்கும் முயற்சியைக்கூட அவர்கள் எடுப்பதில்லை. கொடுமையைச் செய்பவர் அந்நியர் என்றால் மட்டுமே பிரச்சினை அம்பலப்படுத்தப்படுகிறது. வழக்கு, தண்டனை வரை போகிறது.

ஐந்தில் ஒரு பிள்ளை என்பது சாதாரண கணக்கா என்ன? இந்த ஆய்வு குறிப்பிடும் பாதிக்கப்படுவோரில் நம் பிள்ளைகளும் இருக்கலாம்! அவ்வாறு இல்லை என்றாலும் இத்தனை குழந்தைகள் பாலியல் கொடுமைக்கு ஆளாகிற சமூகத்தின் அங்கமாக இருப்பதே நமக்கெல்லாம் எச்சரிக்கைதானே! உடலில் வெளிப்படையான காயங்கள் தெரிந்தால் மட்டுமே பெற்றோர் குழந்தையின் வாக்குமூலத்தை சீரியஸாக எடுத்துக்கொள்கின் றனர். வெளியே தடயங்கள் தெரியாத, உயிருக்கு ஆபத்தில்லாத பாலியல் அத்துமீறல்கள் குழந்தைகள் மீது ஏவப்படுகின்றன. அது மனக்காயமாக சாகிற வரை உள்ளுக்குள் கிடக்கிறது. ஏழெட்டு வயதில் நடந்த கொடுமையை நினைக்கும்போது, நமக்கு இப்போதும் ஏன் பதறுகிறது? ஏனென்றால், அது ஆறவே ஆறாத காயம்.

பாலியல் அத்துமீறல் என்றதும் நம் கவனம் பெண் பிள்ளைகள் மீதுதான் திரும்புகிறது. ஆண் பிள்ளைகளை அந்த வரையறைக்குள் வைப்பதே இல்லை. ஆரம்பப் பள்ளியில் இருந்த ஒரு சிறுவனுக்கு நல்ல தொடுகை, கூடாத தொடுகை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது, அவரின் அம்மா "பையனுக்கு எதுக்கு இதெல்லாம் சொல்லித்தாறீங்க" எனக் கேட்டார். பாலியல் ரீதியாக பாதிக்கப்படும் குழந்தைகளில் சரி பாதி ஆண் பிள்ளைகள் என்கின்றன ஆய்வுகள். ஆனால் நாமோ, ஆண் பிள்ளைகளுக்கு அது நேராது என்றும், நேர்ந்தாலும் அதை ஆண் பிள்ளை சமாளித்துக் கொள்ளும் என்றும், கற்பு பறி போதல், கருவுறுதல் போன்ற பிரச்சினைகள் ஆண்களுக்கு இல்லை என்பதாலும் விட்டுவிடுகிறோம். பாலியல் தாக்குதல் என்பது ஒரு வன்முறை. வன்முறைக்கு ஆண் பெண் பாகுபாடெல்லாம் கிடையாது. பலாத்காரத்தை ஒரு வன்கலவியாகக் (Wild Sex) கருதும் நோய்மைச் சமூகத்தில் ஆண் பிள்ளைகளுக்கு அதனால் பாதிப்பு வராது என நம்புவதில் வியப்பேதும் இல்லை.

கலாசாரம் என்ற பெயரில் பெண்கள் தங்களது உடலைப் பாதுகாத்துக்கொள்ள இராணுவக் கட்டுப்பாடே இங்கு நடைமுறையில் இருக்கிறது. ஆண்களுடன் பேசக்கூடாது, தொடக்கூடாது, வெளியில் போகக் கூடாது எனப் பல விதிமுறைகள். ஆனால், ஆண் பிள்ளைகளுக்குக் கட்டற்ற சுதந்திரம் வழங்கப்பட்டு, பாதுகாப்புக் குறித்து எந்தப் பயிற்றுவித்தலும் தரப்படுவதில்லை. ஆண் மகன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வான் என்பது நமது மூடநம்பிக்கை. ஆறு வயதுப் பெண்ணுக்கு உள்ள அதே மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சிதான் அதே வயதுடைய ஆண் பிள்ளைக்கும் இருக்கும். பெண் குழந்தைகளை அந்நிய ஆண்களுடன் நெருங்கவிடாத நாம், சிறுவன்களை 'பொசிட்டிவ்' பாரபட்சத்தில் விட்டுவிடுகிறோம். இதனால், ஆசிரியர்களால், வயதில் மூத்த மாணவர்களால், நண்பர்களால், உறவினர்களால், பெண்களால் ஆண் குழந்தைகளும் பாலியல் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

குழந்தைகள்மீது பாலீர்ப்பு கொள்வதற்கு பீடோஃபீலியா என்று பெயர். அது இயற்கையான பாலியல் தேர்வா, மனக்கோளாறா என்பதற்கான ஆய்வுகள் தொடர்கின்றன. வெளிநாடுகளில் நடத்தப்பட்ட சில ஆய்வுகளின்படி பொதுவான மக்கள்தொகையில் மிகக் குறைந்த அளவில் அதாவது 1-5 வீதத்தினர் மட்டுமே இவர்கள் உள்ளனர். ஆனால், நம் நாட்டில் குழந்தைகள் மீது நடக்கும் பாலியல் தாக்குதல்களின் அளவைப் பார்க்கும் போது நிச்சயம் அவை பராயம் அடையும் முன்னர் அனைத்தும் நிகழவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். பாலுறவு குறித்த நமது வக்கிரமான புரிதல்களும் கட்டுப்பாடுகளுமே அதற்குக் காரணமாக அமைகின்றன. எந்தவொரு சாதாரண நபரும் பாலியல் வக்கிர உணர்வு தோன்றும் போது எதிர்க்க முடியாதவர்களான சிறுவர்களை பாதிக்கப்பட்டவர்கள் ஆக்குகின்றனர். அதாவது பெரியவர்களுக்கு செக்ஸ் பண்ண பெரியவர்கள் கிடைக்காத நிலையில் குழந்தைகள் இரையாக்கப்படுகின்றனர்.

இப்படியான அத்துமீறலை. நிகழ்த்துவது குற்றவாளிக்கான வரையறைக்குள் வருகிறவர்கள் அல்லர். நாம் நேசித்து, தொட்டு, பார்த்து, பேசி, பழகி, சிரித்து உறவாடும் சக மனிதர்கள்தான் இதை நிகழ்த்துகின்றனர். ஏன் இந்த அவலம்? காமம் என்ற இயற்கையான உணர்வை இழிவானதாகவும் புனிதமானதாகவும் இரண்டு எல்லைகளில் கொண்டு போய் வைத்து அதன் நடைமுறைத் தன்மையைச் சிதைத்ததன் விளைவுதான் குழந்தைகள் எதிர்கொள்ளும் பாலியல் பிரச்சினைகளுக்கு அடிப்படை.

செக்ஸ் என்றால் அருவருப்பு, செக்ஸ் என்றால் பயம், செக்ஸ் என்றால் தீமை, செக்ஸ் என்றால் நடத்தைக்கேடு, செக்ஸ் என்ற மனவியாதி என்பதாக ஒரு மாயை இங்கே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பசிக்கு இணையான அவ்வளவு இயல்பான ஒரு விடயத்தைக் கண்டு நாம் ஏன் இவ்வளவு அச்சமும் அருவருப்பும் கொள்கிறோம். ஆரோக்கியமாகக் கையாள வேண்டிய ஒன்றை ஏன் இத்தனை நோயுற்றதாக மாற்றிவிட்டோம். சரி, ஒரு விடயம் தவறு என நாம் நம்புகிறோம் எனில், அதைச் செய்யக் கூடாதுதானே! குறைந்தபட்சம் அதிலிருந்து விலகி இருக்க வேண்டுமில்லையா? ஆனால், செக்ஸைத் தவறு எனச் சொல்லிக்கொண்டே அது சார்ந்த அத்தனை அக்கப்போர்களிலும் ஈடுபடுகிறோம்.

பாலியல் ரீதியான குற்றங்கள் மலிந்து கிடக்கும் நாட்டில் செக்ஸ் பற்றிப் பேசுவதும் கற்பிப்பதும் எப்படிக் குற்றமாகும்?! இன்றைய நவீன காலத்தில்கூட அதை வெளிப்படையாகப் பேசக் கூடாத ஒன்றாக வைத்திருக்கிறோம். குழந்தைகளுக்கு 'பாலியல் கல்வி வேண்டும்' என்ற பொறுப்பானவர்களின் கோரிக்கை தவறாகவே பார்க்கப்படுகிறது. குழந்தை கெட்டுப் போகும் என ஆளாளுக்கு எதிர்த்தோம், எதிர்க்கிறோம். உண்மை என்னவெனில், யாரும் சொல்லித் தராமலேயே 10-12 வயதில் இயற்கையான பாலுணர்வு தோன்றுகிறது. அது தவறான விடயமல்ல, வளர்ச்சியின் அறிகுறியே! அதை இன்னதென இனங்காண்பதிலும் கையாள்வதிலும் ஒரு குழப்பம் குழந்தைகளை ஆட்கொள்கிறது. நல்ல தொடுதலையும் தவறான தொடுதலையும் அவர்களால் பிரித்துப் பார்க்க முடிவதில்லை.

(இன்னும் பேசுவோம்)

# பல்துறைகளில் பங்களித்த விடுதலை ஆர்வலர்
# பொன்.பூலோகசிங்கம்



சுடரவன்

இனப்பற்றுமிக்க சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் கடந்த 06 ஆம் திகதி புன்னாலைக் கட்டுவனில் காலமானார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்தார். அங்கிருந்து வெளியேறிய அத் தொகுதி தமிழ் மாணவர்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த பொன். வேணுதாஸூம் இவரும் தமிழில் சத்தியப் பிரமாணம் செய்தனர். எழுத்துத்துறையிலும் ஆவணங்கள் சேகரிப்பிலும் மிக்க ஆர்வமுள்ளவராக இவர் இருந்தார். சுதந்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக விளங்கினார்.

1973 இருந்து டாக்டர் கனக. சுகுமாரும் இவரும் இணைந்து பல்வேறு கலைஞர்களை சிரித்திரன் சார்பில் செவ்வி கண்டனர். இவை "தேன்பொழுது" என்ற பெயரில் நூலுருப் பெற்றன. ஈழ முரசு நாளிதழிலும், வாரமலரிலும் 1986 - 1987 காலகட்டங்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதினார். அருண் பிரசாத் என்ற பெயரில் எழுதப்பட்ட இவை அரசியற் களத்தை மையமாகக் கொண்டவை.

ஆயுதக் கையளிப்பு தொடர்பாக 1987 ஒகஸ்ட் ஆரம்பத்தில் தலைவர் பிரபாகரன் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் ஈழமுரசின் சார்பில் இவரும் கலந்துகொண்டார். ஈழநாதம் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது இவரே வெளியீட்டாளராக இருந்தார். மாவீரர்களின் வரலாற்றை எடுத்தியம்பும் கட்டுரைகளை நேதாஜி என்ற பெயரில் எழுதினார். கள நிகழ்வுகளும், கள நினைவுகளும் என்ற தலைப்பில் எழுதிய இக் கட்டுரைகள் காத்திரமானவை. இதில் வெளியான மாவீரர் பட்டியலைத் தயாரிக்க இவரது நாட்குறிப்பே ஆதாரமாக இருந்தது. குறிப்பாக இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த 1988 - 1989 காலகட்டங்களில் பதிவுகள் வேறு எங்கும் ஒழுங்காக இருந்திருக்கவில்லை. வெள்ளிநாதத்தில் கலாநிதி முரளி மாறன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

தமிழீழ நீதி நிர்வாகத் துறை ஆரம்பிக்கப்பட்ட போது சட்டவாளர்களாக பயின்றோருக்கு ஆரம்பத்தில் இவரே விரிவுரைகளை நடத்தினார். சுதந்திரன் பத்திரிகைகள் உட்பட பல்வேறு பத்திரிகைகளைச் சேகரித்து , வைத்திருந்தார் . பல முக்கிய வரலாற்று ஆவணங்களும் இவரிடம் இருந்தன. அவை அனைத்துமே சமாதான காலத்தில் இழக்கப்பட்டன அரசுக்காதரவான ஆயுதக் குழுவொன்று மேற் கொண்ட அட்டகாசத்தால் கொக்குவிலிலிருந்த தனது வதிவிடத்தை விட்டு அவர் தலைமறைவாக வேண்டியிருந்தது (அந்தக் காலகட்டத்தில் இவர் பதில் நீதிவானாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது). மருதநகர், ஜெயந்தி நகர், முள்ளியவளை போன்ற இடங்களில் வாழ நேர்ந்தது.

பல்லாண்டு காலமாக சேகரித்த வரலாற்று ஆவணங்களைப் பறிகொடுத்ததின் பாதிப்பு இவரை நோயாளியாக்கியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பட்டாளர்களில் ஒருவராக இருந்த இவர், பின்னர் டாக்டர் தருமலிங்கம், கோவை மகேசன், ஈழ வேந்தன் ஆகியோருடன் இணைந்து தமிழீழ விடுதலை அணியை உருவாக்கினார். 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டுக் காலத்தில் தனிநாயகம் அடிகளார், சாலை. இளந்திரையன் ஆகியோரால் உருவாக்கப்பட்ட உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தை மலேசியா அமைச்சர் , வீரப்பன் மற்றும் சண்முகலிங்கம் ஆகியோர் தலைமை தாங்கி வழி நடத்திய காலங்களில் அதன் செயற்பட்டாளர்களில் ஒருவராக விளங்கினார் .

பத்திரிகையாளர்கள் எழுத்தாளர்கள் தமக்குத் தேவையான விவரங்களைப் பெற இவரை நாடுவது வழக்கமாக இருந்தது. அபாரமான நினைவாற்றல் இவருக்கு இருந்தது . நடமாடும் தகவல் களஞ்சியமாக இருந்த இவரது மறைவு . தமிழருக்குப் பேரிழப்பே. ஈழநாதத்தில் வெளிவந்த "கள நிகழ்வுகளும் தள நினைவுகளும் கட்டுரைத் தொடரை புத்தகமாக்க தமிழ் ஆர்வலர்கள் முன்வரவேண்டும். குறிப்பிட்ட ஆயுதக்குழுவினரால் சேதமாக்கப்பட்ட அல்லது கொண்டு செல்லப்பட்ட ஆவணங்கள் யாழ். பொது நூலகம் போன்ற பொது அமைப்பொன்றின் வசம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் . இப்போதுதான் சகலருடனும் தொடர்புகொள்ளக்கூடிய ஒருவர் அடையாளம் காணப்பட்டிருக்கிறாரே !

## இந்திய...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருபுறமும், மறுபுறத்தில் அரைகுறை ஆடைகளுடனும், மறைவிடங்களைக் குலுக்கி நடனமாடி, காமவக்கிர உணர்வுகளைத் தூண்டும் வகையிலும், காதலுக்காக கண்ணீர் விடுபவர்களாகவும், ஆண்களுக்காகத் தியாகஞ் செய்பவர்களாகவுமே பெரும்பாலான இந்தியப் படங்கள் சித்திரிக்கின்றன. அதாவது பெண்ணடிமைத்தனத்தையும், பெண்கள் ஆண்களின் தேவைகளை நிறைவேற்றும், பாவனைப் பொருட்கள் என்பதையும், கலாசாரத்தின் பேராலும், ஒழுக்கத்தின் பேராலும், பெண்கைளை ஏற்றுக் கொள்ள வைக்கும் மூளைச் சலவையை இப் படங்கள் செய்துவிடுகின்றன.

ஆனால் பெண்களிடமுள்ள இயல்பான போர்க்குணம் வெளிவரும்போது, பெண்ணடிமைத்தனம் தகர்க்கப்பட்டு, "ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம்" என்ற நிலை நிச்சயம் உருவாகும். அதில் சில பெண் நெறியாளர்களும், நடிகைகளும் முன்னிற்பது ஓர் ஆரோக்கியமான அறிகுறியாகும்.

## சர்வதேசப் பெண்கள்

### ப்ரீதிலதா

சூர்யா சென் தலைமையிலான இந்துஸ்தான் குடியரசு இராணுவத்தில் இணைந்து பல ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளில் பங்கு கொண்டு சாதனை படைத்தவர் ப்ரீதிலதா. சிட்டாகொங் வெள்ளையருக்காக விருந்தினர் விடுதியில் வங்காள ஆளுநரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தோல்வியடைந்த நிலையில் அவர் கைது செய்யப்படும் நிலைமை ஏற்பட்டபோது சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிய முதல் வீராங்கனை ப்ரீதிலதா

### பீனாதாஸ்

வங்கப் பல்கலைக் கழக பட்டமளிப்புவிழாவில் உரையாற்றிக் கொண்டிருந்த ஆளுநரைச் சுட்டுக் கொன்று சாதனை நிகழ்த்தியபோது கைதுசெய்யப்பட்ட வீராங்கனை பீனாதாஸ். அந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### ரிவேமுகா அம்மையார்

சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையான இவர், பெண் விடுதலைக்காகப் பல போராட்டங்களை நடத்தியவர். கணவன் இறந்ததால் அவர் தகனஞ் செய்யப்படும்போது உடன்கட்டை ஏறும் வழக்கத்தை அடியோடு இல்லாமற் செய்யப்பாடுபட்டவர்.

கவிஞர் பாரதியார் கல்கத்தாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் பாராட்டுக்குச் சென்றபோது, அவரிடம் ஏன் மனைவியை அழைத்து வரவில்லையெனக் கேள்வி எழுப்பினார். அதற்குப் பாரதியார் தன் மனைவிக்கு விடுதலை பற்றி எதுவும் விளங்காது எனப் பதிலளித்தபோது, "ரிவேமுகா" உங்கள் மனைவிக்கே நீங்கள் விடுதலை கொடுக்காதபோது நாட்டு விடுதலை பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை என்று அடித்துச் சொன்னார். அதன் பிறகு பாரதியாரின் பாடல்களில் பெண் விடுதலை சுடர்விட ஆரம்பித்தது. அது மட்டுமின்றி எட்டயபுரம் வீதிகளில் அவர் தன் மனைவி செல்லம்மாவின் தோளில் கைபோட்டு வலம்வந்தார்.

### மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்

இந்தியாவில் நிலவிய தேவதாசி முறையை ஒழிக்கப் பல போராட்டங்கள் நடத்தி இந்தித்துவ மத வெறியர்களால் பலவித இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டவர். எனினும் இலட்சியத்தில் விடாப்பிடியாக நின்று வெற்றிபெற்றார்.

### வேலு நாச்சியார்

வெள்ளையருக்கு எதிரான போராட்டத்தின்போது சதி நடவடிக்கை மூலம் வேலுநாயக்கர் கொல்லப்பட்ட பின், போராட்டத்துக்குத் தலைமை தாங்கி, வெள்ளையரைத் திண்றடித்து, களத்திலேயே வீரச்சாவடைந்தவர்.

### தஸ்லிமா நஸ்ருதீன்

இவர் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த சிறந்த நாவலாசிரியை. இவரது நாவல்கள் முஸ்லிம் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போர்தொடுத்தன. குறிப்பாக "தலாக்" முறை மூலம் ஆண்கள் தாம் விரும்பியபோது மனைவியரை விவாகரத்துச் செய்வது, "கந்து வெட்டு" முறைமூலம் பெண்களின் பிறப்புறுப்பில் சேதமேற்படுத்துதல் போன்றவற்றை கடுமையாகக் கேள்விக்கு உட்படுத்தினார் இவர். இதன் காரணமாக இவரைக் கொலை செய்பவர்களுக்கு ஒரு லட்சம் டொலர் வழங்கப்படுமென இஸ்லாமிய அடிப்படைவாதிகள் அறிவித்தனர். இவர் தற்சமயம், பங்களாதேஷிலிருந்து தப்பிப்போய் சுவீடனில் வாழுந்து வருகிறார். ஆனால் இவர் கொலை அச்சுறுத்தல் மத்தியிலும், பெண் விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்ந்து வருகிறார்.

# ஆரிட்டைச் சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## வீணாக்கக் கூடாத வளங்கள்

மூந்த நாள் எண்டு நினைக்கிறன். பருத்தித்துறை பஸ்ஸிலை புறாப்பொறுக்கிக்கு ஒரு அலுவலாப் போன்னான். பஸ் எடுக்கக் கொஞ்ச நேரம் இருந்திது. கொண்டு போன பேப்பரைப் பாத்துக் கொண்டிருந்தன். அதுக்கிடையிலை 'கசமுச' எண்டு கத்திக் கொண்டு மூண்டு பெடித்தரவளியள் வந்திருந்திதுகள். பாக்க கொஞ்சம் டீசன்ற்றாத்தான் இருந்தினம். கையிலை இரண்டு மூண்டு பைலுகளையும் கொண்டு தான் ஏறினவை. எங்கையோ படிச்சிட்டு வாற மாதிரிக் கிடந்திது. கேக்கலாம் எண்டு பாத்தால் அவங்கள் தங்களுக்குள்ளை பிணைபட்டுக் கொண்டிருந்தாங்கள்.

ஆனால் ஏறின நேரம் தொடக்கம் தாங்கள் அண்டு படிச்சதைப் பற்றியோ? இல்லாட்டி என்ன படிக்கிறது? ஏது படிக்கிறது எண்ட கதையையோ கதைக் கேல்லை. ஸ்ரீதேவி செத்த கதை யோடை கதை துவங்கிச்சிது. தற்கொலையோ? மேடறோ எண்டு, கொஞ்ச நேரம் பட்டிமன்றம். "இல்லை, ஓம்" எண்ட பிச்சுப் பிடுங்கலோடை பிறகு கமல் நல்ல தவைரோ? ரஜனி நல்ல தலைவரோ? எண்ட விவாதம். ஒராள் கமல் பிறந்து தாயிட்டைப் பால் குடிச்சது தொடக்கம், எங்கை படிச்சது? ஏது படிச்சது? அவர் எத்தினை கல்யாணம் செய்தவர்? ஏன் மூத்த பெண்சாதியை விட்டிட்டு சரிதாவைக் கட்டிப் பிறகு கௌதமியோடை நிக்கிறார். உது ஒரு தலைவனுக்கு அழகில்லை எண்டு ஒண்டு சொல்ல, மற்றது சொல்லிச்சிது. கமல் தன்ரை முக நூலிலை தன்ரை கலியாணங் களைப் பற்றிச் சொன்ன மறுமொழி பிழை. கலியாணமும் சினிமாவும் என்ரை பேசனல் விசியம். பொது வாழ்க்கையிலை நான் ஆரையும் கெடுத்தனானோ? கையைப் பிடிச்சு இழுத்தனானோ? எண்டு சொல்லுங்கோ. ஆற்றையேன் சொத்தைச் சூறையாடின்னானோ எண்டு பாருங்கோ? எண்டுதானே கமல் சொல்லுறார்.

அதுக்கு மற்றவன் சொன்னான் ரஜனிதான் நல்ல தலைவர். அவர் நடிச்ச படங்கள் எல்லாம் பிரமாண்டம். கன நாள் ஓடினது. அவர் கமலைக் காட்டிலும் சமய நம்பிக்கை உள்ளவர். அவர் ராகவேந்திரரிலை பக்தி உள்ளவர். அதோடை பெட்டைச் சேட்டையும் இல்லை. இமயமலைக்கும் போய் தவமிருக்கிறவர். ஆனபடியாலை தமிழ் நாட்டுக்கு ஏற்ற தலைவர் ரஜனிதான் எண்டான். "எட கமல் ஒரு நாஸ்திகன். கடவுள் நம்பிக்கை இல்லாதவன். அவன் வந்தால் தமிழ் நாட்டிலை உள்ள கோயில் குளங்களை எல்லாம் அழிச்சுப் போடுவன். உவன் தமிழ் நாட்டுக்குச் சரிவரமாட்டான். எண்டு மூண்டாவது கத்திச்சிது.



பஸ் வெளிக்கிட்டு ஆரியகுளத்தடி யிலை நிண்டதுதான் தாமதம் ரியூசன் முடிஞ்சு கொஞ்சப் பொம்பிளைப் பிள்ளையள் ஏறிச்சுதுகள். "எட உன்ரை ஆள் வாறளெடா. என்ரை ஆள் வாறளெடா" எண்ட கதையோடை அவையின்ரை ரஜனி, கமல் கதையள் எல்லாம் நிண்டு போச்சுது. பிறகு அந்தப் பொம்பிளைப் பிள்ளையளுக்கு எறி கதையள் விடத் துவங்கிவிட்டாங்கள்.

என்ரை ஞாயம் என்னவெண் டால் தமிழ் நாட்டிலை நடக்கிற எந்த மாற்றமும் உங்களைப் பாதிக்காது. வேணுமெண் டால் கேபிள் ரீவியள் கொஞ்ச நாளைக்குப் படத்தைக் காட்டாமல் இருக்கும். அதோடை சினிமாப் படங்கள் வராது. தேவையில்லாத சாமான் சக்கட்டுகள் தட்டுப்படும். எட ரஜனி நல்லவரா? கமல் நல்லவரா? எண்டு அடிபடுகிற தேவாங்குகள் சம்பந்தன் நல்ல தலைவரா? சுமந்திரனை ஆர் அரசியலுக்கை கொண்டு வந்தவை? மாவை என்ன செய்யிறார்? கஜேந்திர குமாற்றை நிலைப்பாடு சரியோ? டக்ளஸ் எடுக்கப்போற அடுத்த கட்ட முடிவு என்ன? சீ.எம்மின்ரை அடுத்த அதிரடி என்ன?, எண்டு கதைக்கிறியளே?

அதுக்கும் அப்பாலை போய் மைத்திரியின்ரையும், மகிந்தாவின்ரையும், ரணிலையும் பற்றிக் கதையுங்கோ. அது எங்களோடை ஒத்த விசியம். எங்களை நேரடியாப் பாதிக்கிற விசியம். சில வேளையிலை எங்கடை தலை எழுத்தை மாத்திற விசியமாவும் இருக்கலாம்? அது பற்றின அறிவும் இல்லை. அதைப்பற்றின சிந்தனையும் இல்லை. வீட்டை போனால் வாய்கு ருசியாச் சமைச்சு வைப்பினம். கொஞ்சம் அழுது குளறிக் கேட்டால் ஹொண்டாவோ, யமகாவோ வேண்டிக் குடுப்பினம். செலவுக் கும் காசு வீட்டிலை இருந்து கிடைக்கும். வேண்டிச் சுதி பண்ண வேண்டியதுதானே? அதுக்கை ஒண்டு சொல்லுது பொம்பியைளும், கறண்டும் ஒண்டாம். தொட்டால் அடிக்கு மாம். அதாலை சில வேளை அழியவும் வேணுமாம். இது அவற்றை கண்டு பிடிப்பு. அதைப் பாத்து நான் கேக்கிறன் உன்னை இந்த வயசிலை ஆர் அதைத் தொடச் சொன்னது? தொட வேண்டிய நேரத்திலை தொடு அது அடிக்காது. அதாலை அழியவும் மாட்டாய். இது பிஞ்சிலை பழுக்கிறதாலைதானே எல்லாம் தலை கீழா நடக்கிது.

அதைவிடுங்கோ. நாங்கள் கதைச்சுத் துன்பப்பட வேண்டிய விசியங்கள் கனக்க இருக்கு. அதிலை முக்கியமானதுகளிலை ஒண்டு. எங்கடை நாளைய சந்ததி தண்ணி இல்லாமல் வாளியோடை றோட்டுக்கு றோட்டு அலையப் போகுதுகள். அதைப் பற்றி ஆராவது கவனமெடுக்கினமோ? வாங்கின காரையும், மோட்டச் சைக்கிளையும் ஒரு நாள் விடாமல் கழுவித் தண்ணியை வீணாக்கிறவை சிந்திக்கினமோ? இயற்கையா இருக்க வேண்டிய நாயைக் கட்டிப்போட்டு அதுக்குக் குளிக்க வாக்கிற நாயன்மார்களே நீங்கள் சிந்திக்க வேண்டிய விசியம் இது. அதோடை எங்கடை நிலத்துக்கு ஒவ்வாத மலை நாட்டுக் காட்டு மரங்கள் சிலதையும் கொண்டு வந்து அதுக்கு மாட்டெரு போட்டுத் தண்ணி இறைச்சு வளர்க்கினம். ஏனெண்டு கோட்டால் வீட்டுக்கு அது வடிவாம். நிலத்தடி நீர் பவுண் மாதிரி. நிலத்திலை இருந்து எடுக்கிறது. சொன்னாக் கேக்கிறியளோ? கவனமாகப் பாவிக்கச் சொல்லி. குழாய்க் கிணறு எண்டு நீங்கள் அடிக்கிற கிணறுகள் எவ்வளவு நிலத்தடி நீர்ப்பாதையைச் சேதமாக்கு தெண்டது தெரியுமே..? ஒரு அடிப்படை அறிவும் இல்லாமல் மிருகங்களைப் போல வாழ்கின்ற மனித விலங்குகளே! ஒரு திட்டவட்டமுமில்லாமல் நீங்கள் வாழ்கின்ற வாழக்கை இருக்கிறதே அது எங்கடை சமுதாயத்தை எந்தப் படு குழிக்குள்ளை விழுத்தப் போகுதோ தெரியேல்லை? என்ரை ஐயோ! இதெல்லாத்தையும் ஆரிட்டைச் சொல்லி அழ?

**- கோள்அரங்கன்**



## சூரியனின் மகிமை

பொழுதும் அந்தியும்
சந்திக்கும் ஓவ்வோர் மாலை
மூழ்கும் சூரியன்
யன்னல் அருகில் நான்
மெதுவாக ஒளி கரையும்
நேரமும் நீளும்
அமைதியாய் தனித்து
எனது இதயமும்
ஆன்மாவினுள் மூழ்கும்
சூரியனின் மகிமையை
மறுபடியும்
காண்பேனோ நானறியேன்.

## விண்ணப்பம்

மரணமே நீ யார்
எங்கிருந்து வருகிறாய்
எங்கென்னை எடுத்துச் செல்வாய்
வழி தூரமோ
கடும் இருட்டோ
துணிவுள்ளவளாய் கோரிக்கொள்வேன்
ஆயினும் அச்சமுறுகிறேன்
மரணத்திற்கு அப்பால்
எதுவென அறியாததால்
மரணமே
சில வேளைகளில்
உன்னை எதிர்பார்க்கிறேன்
சில நேரங்களில்
வரக்கூடாதென விளைகிறேன்
நிச்சயமாய் என்னை எடுக்கத்தான்
வேண்டுமெனில்
எடுத்துச் செல்வாயானால்
என்மீது இரங்குவாய்
எவராலும் காயப்படுத்தாத
துன்பப்படுத்தாத
கீதாஞ்சலியின் கவிதைகள்

இடத்திற்கு எடுத்துச் செல்
ஒரு விண்ணப்பம்
அன்பாயிரு
குழந்தைப் பருவத்தில்
தூங்கியதுபோல்
என்னைத் தூங்கவிடு

**- கீதாஞ்சலி.**

நன்றி - தாய்வீடு (கனடா)

**கீதாஞ்சலி. இந்தியாவின் உத்தரப்பிரதேசத்திலுள்ள 'மீறுட்டில்' 12-06-1961 இல் பிறந்து, பம்பாயில் 11-08-1977இல் தனது 16வது வயதில், புற்று நோயினால் இறந்துபோன துர்ப்பாக்கியவதி அவள். வெளியுலகத்தினர் யாரும் அப்பொழுது அவளை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவளது பெற்றோர், உறவினர்களைத் தவிர, பாடசாலை நண்பர்கள் அறிந்திருந்ததெல்லாம் அவள் தனது நோய் காரணமாகக் கல்வியை இடைநடுவில் நிறுத்திக்கொண்டவள் என்பதுதான்.கீதாஞ்சலியின் மரணத்தின் பின்னர்தான் அவளது கவிதைகள் அவளது அறையின் மூலையிலுள்ள படுக்கையின் கீழ், புத்தகங்களின் பின்னால், அலுமாரியிலுள்ள விளையாட்டுப் பொருட்களின் பின்னால், பழைய பாவாடையின் பைகளுக்குள் என எங்கெங்கு ஒளித்துவைக்க முடியுமோ அங்கெல்லாம் இருந்து கண்டெடுக்கப்பட்டன.**

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 18

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

"இது இந்த வெட்டையில இரண்டாய்ப் பிரிஞ்சு நாங்கள் இப்ப வந்த அறுத்தோடியாலை போய், அந்த சின்ன மோட்டையிலை முடிஞ்சிடும்.

மழை நேரம் மோட்டை நிறைஞ்சு காட்டுக்கை தண்ணி பாய்ஞ்சு எங்கட கழிவாத்தில விழும். அது அப்பிடியே போய் முதலைக்குடாவுக்கு கீழை அருவியாத்திலை விழும்", என்றார் சின்னப்பர்.

"அப்ப.. இந்தப் பெரிய அறுத்தோடி...?"

"இதிலை வாற தண்ணி நேர போய் குஞ்சுக் குளத்திலை விழும்"

ஒரு கிளை குளத்தில் சேர்ந்து வயல்களுக்கு நீர் பாய்ச்சி பின் கழிவில் சேர மற்றக் கிளை குறுக்குப்பாதை பிடித்து அதே கழிவில் சேர்வதை நினைத்த போது சிவத்துக்கு வியப்பாக இருந்தது. இப்படியான பாதைகளையே ஆழ ஊடுருவும் படையணியினர் பயன்படுத்தக் கூடும் என அவன் கருதினான்.

முருகரும் தாங்கள் வந்த நோக்கத்தை மறந்துவிடவில்லை.

"அண்ணை உப்பிடியே அறுத்தோடியோடை குளம் மட்டும் போய் பாத்திட்டு வருவமே?", எனக் கேட்டார் அவர்.

"சரி.. போய் பாப்பம்", என்றுவிட்டு சின்னப்பர் அறுத்தோடிக்குள் இறங்கி அடுத்த கரைக்கு ஏறி அதன் ஓரமாக நடக்கத் தொடங்கினார். சிவமும் மலையவனும் இரு பக்கங்களையும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டே நடந்தனர்.


தொடர்ந்து நடந்தபோது காட்டுக்குள்ளிருந்து வந்து அந்தப் பெரிய அறுத்தோடியுடன் இணையும் சில குழிகளைக் கடக்க வேண்டியிருந்தது. அப்படியான ஒன்றில் இறங்கி ஏறும் போது சிவம் திடீரென.. "அப்பு.. கொஞ்சம் நில்லுங்கோ..." என்றான். நின்று திரும்பிப் பார்த்த சின்னப்பரிடம், "அங்கை பாருங்கோ", என்றுவிட்டு அவன் வாடிக்கிடந்த காட்டுக் கொடிகளைக் காட்டினான்.

"பொறு வாறன்", என்றுவிட்டு திரும்பி வந்து அந்தக் கொடித் துண்டுகளைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு, "இது கால் சுத்திக்கொடி", என்றார்.

முருகரும் வாங்கிப் பார்த்து விட்டு சிவத்திடம், "இது சும்மா நிலத்திலை கிடக்கும். மிதிச்சமெண்டால் காலைச் சுத்திப் போடும். கழட்டிக் கொள்ள ஏலாது. ஒரு பக்கத்தால கழட்ட மற்றப் பக்கத்தால சுத்திப்போடும்", என்றார்.

சின்னப்பரும், "எங்களைப் போலை அனுபவமுள்ளவைக்கு அதைக் கழட்டுறது எப்பிடி எண்டு தெரியும். புது ஆக்களெண்டால் அதுகளை அறுத்துத்தான் காலைக் கழட்ட வேணும். இல்லாட்டில் அதிலை கிடக்க வேண்டியது தான்", என்றார்.

சிவம் சுற்றும் முற்றும் பார்த்



தான். சற்றுத் தொலைவில் அந்தக் கிளை அறுத்தோடியின் கரையில் அந்தக் கொடி படர்ந்து கிடந்தது.

"அப்பு.. அது தான் அந்தக் கொடியே?"

"ஓமோம்.. அதுதான் என்றுவிட்டு சின்னப்பர் அருகில் போனார். மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். அந்த வெட்டப்பட்ட கால் சுற்றிக் கொடியின் அருகில் வேட்டைச் சப்பாத்துக்களின் அடையாளங்கள் மண்ணில் அழியாமல் கிடந்தன.

முருகர் சொன்னார், "அப்பு.. அவங்கள் இதாலைதான் வந்திருக்கிறாங்கள்"

சின்னப்பர் சற்று யோசித்தவாறு, "வேட்டைச் சப்பாத்து எண்டால் ஆமி தான்.. ஆனால் அவங்கள் ஏன் இதுக்கை வரப்போறாங்கள்.. ஏன் இஞ்சை வைச்சு சாப்பிடுறாங்கள்.. ஒண்டுமே விளங்குதில்லை" எனக் குழம்பினார்.

ஆனால் சிவத்துக்கு எல்லாமே விளங்கியிருந்தாலும் அவன் எதுவுமே பேசவில்லை.

"வாருங்கோ.. இப்பிடி கொஞ்சத்தூரம் போய்ப் பாப்பம்", என்றுவிட்டு சின்னப்பர் அந்தக் கிளை அறுத்தோடியினூடாக நடக்க ஆரம்பித்தார். அருகிலிருந்த பற்றைகள் இடைஞ்சல் செய்த போதிலும் அவர் அதைப் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டிருந்தார்.

போகப் போகக் காடு பெரும் மரங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. அறுத்தோடியின் மணற்பாங்கான இடங்களில் வேட்டைச் சப்பாத்தின் அடையாளங்கள் தென்பட்டன.

சின்னப்பர் சிறிது தூரம் சென்ற பின்பு, "முருகர்.. உப்பிடியே நேரை போனால் வில்பத்துக் காடு தான். அங்காலை நாங்கள் வேட்டைக்குப் போறேல்லை. உங்காலை காடு பார்த்து பொடியளுக்கு பிரியோசனமில்லை. மற்றது ஆரோ வித்தியாசமான ஆக்கள் காட்டுக்கை இறங்கியிருக்கிறாங்கள் எண்டும் விளங்குது. ஆனால் இவங்கள் வில்பத்து பக்கத்தாலை தான் வந்திருக்கிறாங்கள் எண்டும் விளங்குது. இனித் திரும்புவம் எண்டு யோசிக்கிறன்" என்றார். முருகர் சிவத்தைப் பார்த்தார்.

அவனும், "ஓமப்பு திரும்புவம்", என்றான்.

போன பாதையிலேயே திரும்பவும் கழிவாற்றங்கரைக்கு அவர்கள் வந்துசேர்ந்தனர்.

சிவம் கழிவாற்றைப் பார்த்தான். அது வளைந்து வளைந்து சென்று காட்டுக்குள் மறைந்தது. அவன் சின்னப்பரிடம், "இது எங்கையப்பு போகுது?" எனக் கேட்டான்.

"உது உப்பிடியே போய் முதலைப்பிட்டிக்கு கொஞ்ச தூரம் கீழை போய் விழும். பாக்கிற தெண்டால் வாருங்கோ போவம் கனதூரம் இல்லை", என்றுவிட்டு கழிவாற்றங்கரையால் நடக்கத் தொடங்கினார் சின்னப்பர்.

அவ்விடத்தில் காடு அவ்வளவு அடர்த்தியாக இருக்க வில்லை. இடையிடையே பெரும் மருதமரங்களைக் காணக் கூடியதாக இருந்ததால் இவ்விடம் நல்ல நீரோட்டம் உள்ள இடமாக இருக்க வேண்டுமென சிவம் ஊகித்துக் கொண்டான்.

அருவியாற்றங்கரைக்கு வந்ததும் சின்னப்பர், "இதிலை ஆறு கொஞ்சம் ஒடுக்கமெண்டாலும் வேகமும் ஆழமும் கூட. ஆத்துக்கு அங்காலை போறதெண்டால், இதக் கடந்து முதலைப்பிட்டியிலைதான் இறங்கவேணும்" என்றார்.

"இதிலை வேறை இடத்திலை கடக்கேலாதே",

"கடக்கலாம். ஆனால் நேரை ஆத்துக்கு குறுக்க போனால் பள்ளங்களிலை விழுந்து தண்ணியோட போக வேண்டியது தான். தெரிஞ்சவங்கள் பள்ளங்களை விலத்தி ஏரி மாதிரிக் கிடக்கிற இடங்களிலை கடப்பார்கள். மாரியெண்டால் நினைச்சுப் பார்க்க ஏலாது", என்றார் அவர்.

தன் கேள்விகளுக்கு அவர் தரும் ஒவ்வொரு பதில்களும் ஆழ ஊடுருவும் படையணியினரின் பாதையை வரைபடம் காட்டி விளங்கப்படுத்துவது போன்று சிவத்தைத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தன.

அவன் சிறுத்தைப் படையணியில் இருந்த போது ஒரு முறை ஒரு தாக்குதலில் பங்கெடுத்துவிட்டுத் திரும்பும் போது, காடு மாறி முள்ளுக் காட்டுக்குள் அகப்பட்டுப் படாத பாடு பட்டதும், பின்பு கொக்குகள் பறந்த திசையை நோக்கி நடந்ததும், பூவசரன் குளத்தில் ஒரு வயல் காவல் கொட்டிலில் போய் மிதந்ததும் நினைவுக்கு வந்தது. பின்பு விவசாயின் உதவுடன் தம்பனையின் பின் பக்கத்தால் வந்து பண்டிவிரிச்சானை அடைந்தார்கள்.

ஆனால் சின்னப்பர், முருகப்பர் போன்ற வேட்டைக்காரர்கள் எவ்வளவு துல்லியமாக காடுகளை யும், அங்குள்ள ஆறுகள், நீர் நிலைகள் என்பவற்றையும் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்த போது அவர்கள் மீது ஒரு தனியான மதிப்பு உருவாகியது.

மதியம் கொட்டிலுக்கு திரும்பிய அவர்கள் சிவம் கொண்டு வந்த அரிசியில் சமைக்க ஆரம்பித்தனர். முருகர் பருப்பையும் கருவாட்டையும் போட்டு ஒரு கறி வைக்க, சின்னப்பர் உருக்கி ஒரு போத்தலில் விட்டு வைத்த பன்றி நெய்யில் மரை வத்தலைப் பொரித்து எடுத்தார். முருகர் தோட்டத்தின் ஒரு மூலையில் நின்று பிம்பிளி மரத்தின் காய்களைப் பிடுங்கி வந்து புளிக்குப் பதிலாக பருப்புக் கறியில் போட்டு அவிய விட்டார்.

சிவமோ மலையவனோ அப்பிடி ஒரு சுவையான உணவை முன் எப்பொழுதுமே சாப்பிட்டதில்லை. தேங்காய், கடுகு, சீரகம் என எதுவுமே இல்லாமல் எப்பிடி இவ்வளவு சுவையான உணவைச் சமைக்க முடியும் என அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# பெண் சாதனையாளர்கள்



## பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு

பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற காலத்தில் பல பெண்கள் உரிமை தொடர்பான செயலமர்வுகளில் பங்கெடுத்தவர் மட்டுமல்லாது புலமைசார் பணியையும் சமூகப் பணிகளையும் ஒருங்கிணைத்த முயற்சியாளர். 1980 களில் அன்னையர் முன்னணி, பெண்கள் ஆய்வு வட்டம், பூரணி பெண்கள் மையம் என்ற நிறுவனங்களில் இணைந்து பணியாற்றியவர். 2007 - 2010 க்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கை அரசினால், தேசிய பெண்கள் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டவர். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் பணியாக அரசினால் கருதப்படும் நல்லிணக்கப் பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பான செயலணி அங்கத்தவர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டவர். தென்னிலங்கையில் இவர்களினால் உருவாக்கப்பட்ட சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமும் , காலப்போக்கில் கிழக்கிற்கு இடம்பெயர்ந்தது. கிழக்கிலங்கையில் கடந்த பல ஆண்டுகளாக பெண்கள் தொடர்பான முன்னேற்றம், அபிவிருத்தியில் பல பெண்கள் மற்றும் புத்தி ஜீவிகளின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் 'சூரியா' நிலையம் பல்வேறு பெண்ணியம் சார்ந்த வெளியீடுகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. பலரது எழுத்துக்களை நூல்களாகவும், தமது சஞ்சிகைகளிலும் பிரசுரித்து வந்துள்ளது. அந்தவகையில் சூரியாவின் "பெண்" சஞ்சிகை இலங்கையில் பலராலும் பேசப்படும் பெண்ணியம் தொடர்பாக வெளிவரும் சஞ்சிகை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை நூலக நிறுவன எண்ணிம நூலகத்தில் பார்க்க முடியும். இது போலவே மேலும் சில சூரியா நிலையத்தின் வெளியீடுகளையும் ஆவணப்படுத்தி, நூலக நிறுவனம், தமது எண்ணிம நூலகத்தினூ டாகப் பகிர்ந்துள்ளது.

பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு அவர்கள் , எழுத்தாளர், பேச்சாளர், கல்வியியலாளர், கவிஞர், ஆய்வாளர், நூலாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர், பெண்கள் சஞ்சிகைகளின் ஆசிரியக்குழு உறுப்பினர், பெண்கள் அமைப்புக்களின் நிறுவுனர், சோஷலிசப் பெண்ணிலைவாதி, சமூக சேவகி எனப் பலராலும் அறியப்பட்டவர். பர்வதகுமாரி, மும்தாஜ், காஞ்சனா , சித்ரா, சங்கரி, ரோகினி ஆகிய புனைபெயர்களில் கவிதைகளையும் பெண்ணிய ஆக்கங்களையும் படைத்துவருபவர். எழுத்துத்துறையில் இலக்கியம், விமர்சனம், பெண்ணிலைவாதம், பண்பாட்டு ஆய்வு, நாட்டார் வழகாற்றியல் சார்ந்து, ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி வருகின்றார். இவர் சிந்தனை, பிரவாதம், பெண்ணின் குரல், பெண் முதலான இதழ்களின் ஆசிரியராகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறார். இணையத்தில், கூகுள் தேடு பொறி மூலம் உட் சென்றால் அவர் பற்றிய விவரங்கள் அங்கே குவிந்து கிடக்கின்றன.



## அனித்தா ஜெகதீஸ்வரன்

இலங்கைக்குப் பெருமை சேர்த்த இளம் விளையாட்டு வீராங்கனை என்று பலராலும் அறியப்பட்டவர் செல்வி அனித்தா ஜெகதீஸ்வரன். இவர் இளவாலையை பிறப்பிடமாக்கக் கொண்டவர். இலங்கையின் சிறந்த வீராங்கனையாக விளங்கும் அனித்தா ஜெகதீஸ்வரன். கோலூன்றிப் பாய்தலில் தன்னுடைய சாதனைகளை தானே முறியடித்து வெற்றிவாகை சூடிக் கொண்டவர். 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா. கூடிவிளையாடு பாப்பா' என்ற பாரதியின் கூற்றுக்கு அமைவாக அனித்தா ஜெகதீஸ்வரன். விளையாட்டுக்களிலும், விளையாட்டுப் பயிற்சிகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு இயங்கிக் கொண்டிருப்பவர்.

தாய் மடியின் கதகதப்பினை அதிக காலம் உணராது, அப்பாவின் அன்பில் மட்டுமே வாழ்கின்ற ஒரு பெண் அனித்தா. இவர் ஆரம்பக் கல்வியை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் கற்று, இவர் அதன் பின்னரே மகாஜனக் கல்லூ ரியில் இணைந்து கொண்டார். தனது எட்டாவது வயதில் விளையாட்டுகளில் காலடி எடுத்து வைத்தவர். க. பொ. த. சாதாரண தரத்தில் இருந்தபோதே கோலூன்றிப் பாய்தலில் முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

கோலூன்றிப் பாய்தலில் முதல் போட்டியில் மூன்று தடவைகளும் எல்லைத் தடத்தைத் தட்டி மிக மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளார். ஆசிரியர் கமலமோகனின் நெறிப்படுத்தலில் ஆரம்பமான கோலூன்றிப் பாய்தல் விளையாட்டில் பல சாதனைகளை படைக்க வேண்டுமென்று உத்வேகம் ஏற்பட்டது. அத்துடன் ஆசிரியர் சுபாஸ்கரனின் வழிநடத்தலில், "உன்னால் முடியும், சாதிக்கமுடியும் , அடுத்த தடவை எப்படியும் சாதித்து விடுவாய் எனக்கூறியதுமே எனது வெற்றிகளை குவிக்கத் தொடங்கினேன்" என்கிறார் அனித்தா.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தனது நோக்கம், சிந்தனை, இலக்கு அனைத்தையுமே தனது விளையாட்டின் மீது மட்டுமே கொண்டுள்ள அனித்தா பல களங்களைக் கண்ட ஒரு வீராங்கனையாக விளங்குகின்றார். பெண்களுக்கான சமூக கட்டுப்பாடுகள் தனக்கும் இருந்ததாகவும் தனது உறவினர்கள்கூட பெண்ணான உனக்கு இதெல்லாம் வேண்டாம் எனத் தடுத்துள்ளனர் எனவும் இப்போது அவர்கள் எல்லோருமே தன்னை ஆச்சரியமாகவும் பெருமையாக பார்க்கும்போது ஒரு பெண்ணாக விளங்குவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. பெண்ணால் எதையும் சாதிக்கமுடியும் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மிளிர்கின்றேன் - என்று கூறியுள்ளார் அனித்தா.



## அனோமா இராஜகருணா

காட்சி ஊடகத்தின்மூலமும் சமுதாயமாற்றத்தை உண்டாக்கமுடியும் என்ற நம்பிக்கையில், இலங்கையில் குறும்படத் தயாரிப்புகளையும், ஆவணப்படங்களின் தயாரிப்புகளையும் ஊக்குவிக்கின்ற நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட நிறுவனமான, அஜென்டா 14 என்ற அமைப்பின் தலைவியாக அனோமா ராஜகருணா. இவர் இலங்கையைச் சேர்ந்த திரைப்படவியலாளரும், சர்வதேச ரீதியாகத் திரைப்படத்துறையில் புகழ்பெற்றவரும் ஒரு முழுநேரக் கலைஞருமாவார். கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழப்பாணச் சர்வதேசத் திரைப்பட விழாக்களில் இயக்குநராகப் பணியாற்றியவர். அத்துடன் கலைப்படைப்புகளாலும், ஆராய்ச்சிப்பணிகளாலும் தனது தமிழ் தொடர்புகளைக் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாகப் பேணிவருபவர். வட புலத்தில் புலிகளின் நிர்வாகப் பணிகள் மேம்பட்டிருந்த காலகட்டத்திலும், "இடம்பெயர்வும் பெண்களும்" என்ற விடயம்பற்றிய ஆராய்ச்சிப் பணிகளுக்காக அவர்களால் அனுமதிக்கப்பட்ட வர். உலகத்திலுள்ள பல தொண்டர் நிறுவனங்களுடனான தொடர்புகளைப் பேணி அதனூடாகப் பல இளைஞர்களது ஆற்றல்களை வெளிக்கொண்டுவருகின்ற முயற்சியில் வெற்றிகண்டவர். போரும் பெண்களும் என்ற, பெண்கள் பற்றிய இவரின் ஆய்வுகளும் அது பற்றிய ஆவணங்களும் அற்புதமானவை.

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவில் பல பெறுமதிமிக்க படங்களைப் பார்ப்பதற்கு வழி சமைத்ததோடு மட்டுமல்லாது, கொழும்புச் சர்வதேச திரைப்படவிழாவில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமான மனித உரிமையை வற்புறுத்தி, 'நீதி கோருதல்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட ஆவணத்திரையிடல்களை மிக வெற்றிகரமாக அரங்கப்படுத்தியவர். சமூகவிஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தைப்பெற்று ஆராய்ச்சியாளராகத் தனது பணியைத் தொடங்கியவர். பாதிக்கப்பட்ட இனங்களின் இடப்பெயர்வுபற்றிய ஆய்வில் "இடம்பெயர்வும் பெண்களும்" என்ற தலைப்பில் பெண்கள் பற்றி இவரது ஆராய்ச்சி மிகவும் பெறுமதிமிக்கது.

# சொந்தக் காலில் நிமிர்ந்து நிற்கும் பெண்கள்

**பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 3**



குடும்பப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக சுய வேலை வாய்ப்புத் திட்ட அடிப்படையில் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட திட்டம் இது. கண்டி மாநகரத்தில் இதன் ஒரு தொகுதி காணப்படுகிறது. இருந்தும் வட மாகாணத்தில்தான் பல இடங்களில் அம்மாச்சி நிறுவனம் வெற்றிகரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் செயல் திட்டத்தின் மூலம் பல பெண்கள் பயடைகின்றனர் என்றதை நேரில் காணக் கூடியதாக இருக்கிறது.

போசாக்கான பாரம்பரிய உணவுகளை நுகரும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வடக்கு விவசாய அமைச்சு மாவட்டம் தோறும் அம்மாச்சி என்ற பெயரில் வடக்கின் பாரம்பரிய உணவகங்களை அமைத்து வருகிறது. ஏற்கனவே முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளி நொச்சி மாவட்டங்களில் திறந்துவைக்கப்பட்டு அவை வெற்றிகரமாக இயங்கிவரும் நிலையில், தற்போது யாழ்ப்பாணத்திலும் அம்மாச்சி திறந்து வைக்கப்பட்டுள்ளது.வட மாகாணத்தில் இதை முன்னின்று செயற்படுத்த வேண்டும் என்ற முயற்சியை எடுத்தவர் வட மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

5.5 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்ட இந்த உணவகத்தில் உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்யும் உரிமம் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த பெண்களுக்கே வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் கிளிநொச்சி அம்மாச்சிக் கடைத் தொகுதிகளில் வியாபாரம் செய்வதற்கான உரிமத்தை அங்குள்ள சுட ரமுதம், தேனமுதம் ஆகிய மாதர் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு பாரம் பரிய உணவு வகைகள் நுகர் வோருக்கு உடனுக் குடன் தயாரித்துப் பரிமாறப்பட்டுக் கொண்டு இருப்பதாகவும் எந்தவிதமான செயற்கை நிறமூட்டி களோ செயற்கைச் சுவை யூட்டிகளோ உணவில் சேர்க்கப் படமாட்டாது எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த அம்மாச்சி கடைத்தொகுதி களை நோக்கி மக்கள் வரவு அதிகரித்து வருகிறது. ருசிக்காக மட்டுமல்ல தரமான, போஷாக்கு நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும் என்ற வேட்கையோடு மக்கள் வருவதைத்தான் அங்கு காண முடிகிறது. அடுத்ததாக விலை குறைவு என்ற கருத்தையும் மக்கள் முன்வைக்கிறார்கள். நாங்கள் கூட ஒரு நல்லெண் ணெய்த் தோசை ரூபா. 25 க்கும் வடை ரூபா. 20 க்கும் அரை வீற்றர் கொள்ளளவுடைய பப்பாசிப்பழப் பானம் ரூபா. 50 க்கும் பெற்றுக் கொண் டோம். ரூபா 100 க்குள் ஒரு நேர உணவைத் திருப்தியாகவும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதையே வெளியே வாங்கியிருந்தால் ரூபா. 230வரை கொடுத்திப்போம் என்றது எனது கருத்து.


அன்று மதியம் 12.30 மணி இருக்கும். அப்போது தான் அந்தக் கொழும்பிலிருந்து வந்த அதி சொகுசுக் கடுகதி வண்டி வந்து கோண்டாவில் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. என்னோடு வந்தவரிடம் "பசியாக இருக்கிறது. நல்ல சாப்பாட்டுக்கடை ஒன்றிற்று போகலாமா?" என்று கேட்டேன். "வாருங்கள் அம்மாச்சி உணவகம் என்று என்று உண்டு. அரச நிறுவனத்தினால் பெண்கள் மேம்பாட்டிற்காக நடத்தப்படுகிறது. வித்தியாசமான அனுபவமுமாக இருக்கும். வாருங்கள் போகலாம்" என்றார். புகையிரத நிலையத்திலிருந்து அதிக தூ ரம் இல்லை. ஓட்டோ ஒன்றின் உதவியோடு அங்கு சென்றோம்.

மதிய வேளை குழை சாதம் எடுத்துக் கொண்டோம். இலையில் பரிமாறப்பட்டது மிகவும் நாவுக்கினிமையாக இருந்தது. வெளி நாட்டு வாசியாகப்போன எனக்கு எனது முந்திய யாழ்ப்பாண வாழ்க்கை முறையை மனக்கண் முன் நிறுத்தியது அந்தக் குழை சாதம். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு வித்தியாசமான அனுபவம். நாங்கள் எல்லோரும் வட்டமாக இருக்க ஆச்சி குழைத்துப் பரிமாறும் அந்த இனிமையான உணவுக்கு நிகரேது? எனவே "அம்மாச்சி உணவகம்" பொருத்தமான பெயர் என்றார் நீண்ட நாட்களுக்குப் பின்ன நாடு திரும்பிய செல்வா முத்துக்குமார்.

அம்மாச்சி உணவகம். காலை 8 மணிக்குத் திறந்து மாலை 8மணிக்கு மூடப்படுகிறது. திறந்ததும் உணவு உண்பதற்காகக் காத்திருக்கின்றனர் பலர். அவற்றுள் அரச காரியாலயங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணிக்குச் செல்பவர்கள் பலர் நிற்பதைக் கண்டேன். பெரும்பாலும் சுத்தமான, தரமான , செயற்கைச் சேர்க்கை அற்ற உணவுகளை உண்ண விரும்புபவர்களே அங்கே அதிகம் வருகின்றனர். ஒரு முதியவர் அங்கே குரக்கன் றொட்டிக் கடைக்கு முன்னர் காத்திருந்தார். கேட்டதற்கு " எனக்குக் கன காலம் டையபற்றிக் இருக்கு. அப்பிடியான சாப்பாடுகள்தான் நல்லது எண்டு டொக்டர் சொன்னவர். ஆனபடியால் காலமை வந்திடுவன். வந்தால் எனக்குத் தோதான பல பலகாரம் இங்கை கனக்க இருக்கு. வாயக்கு ருசியாகவும் இருக்கு. அதோடை நான் பென்சன் காரன் எண்டபடியால் என்ற வருமானத்துக்குள்ளை வடிவாச் சமாளிக்கக் கூடியதாக இருக்கு." என்று சொன்னார் அவர்.



யாழ்ப்பாணம் பலாலி வீதியில் விவசாய அமைச்சு வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அம்மாச்சி உணவகத்தில் பணியாற்றும் பெண்களுக்குத் தாலைமை தாங்கிப் பொறுப்பாக அவர்களை வழி நடத்தும் திருமதி. இராஜேந்திர சிங்கம் சுதர்சினியை சந்தித்தேன். அவரும் ஒரு கடையை இங்கு நடத்தி வருகிறார்.



"இந்தக் கடைத் தொகுதி தொடங்க முன்னம் எங்களைத் தெரிவு செய்து இரண்டு வருஷம் பயிற்சி தந்தவை. மொத்தம் எட்டு கவுண்டர் இருக்கு. ஒரு நேரத்திலை பதினாறு பேர் தங்கடை வியாபாரத்தைச் செய்யினம். இரண்டு பகுதியா இது இயங்கிது. காலை தொட்டு மதியம் வரை ஒரு "சிப்ற்". பிறகு மதியம் தொட்டு இரவு பூட்டிறவரைக்கும் ஒரு சிப்ற். வியாபாரம் செய்யிறம் எண்டதுக்கு மேலை இங்கை எங்களுக்கு ஒரு அங்கீகாரம் இருக்கு. ஒரு பாதுகாப்பு இருக்கு. வெளியிலை நாங்கள் தனியா ஒரு கடையைப் போட்டு நடத்தினால் இவ்வளவு வசதியும் இருக்காது. வருமானமும் இருக்காது. பாதுகாப்பும் இருக்காது. எங்களை இப்ப ஆக்கள் மதிக்கிறமாதிரி மற்றவை மதிக்கவும் மாட்டினம்.தைரியமா வந்து செய்துபோட்டுத் தைரியமாப் போகலாம். இது அவைக்கு ஒரு நல்ல பாதுகாப்பு வலயம் எண்டு தான் நான் சொல்லுவன். அதோடை கௌரவமா உழைக்கக் கூடியதாகவும் இருக்கிறதை உணருறம். அதோடை இந்த முயற்சி எந்த விதத்திலும் எங்கடை குடும்ப செயற்பாடுகளைப் பாதிக்கிறதில்லை. இதாலை எங்கடை குடும்பமும் நாங்களும் நல்ல முன்னேற்றமடைகிற தாத்தான் சொல்லலாம்."

**கணபதி சர்வானந்தா**



குடும்பப் பாங்காகவே நடிப்பேன் எனப் பல நடிகைகள் கூறினாலும், அவர்களால் கடைசி வரை அதைக் காப்பாற்ற முடிவதில்லை. இந்த வரிசையில் இப்போது சேர்ந்திருக்கிறார் லாவண்யா திரிபாதி.

பட வாய்ப்பு களின்றி இருந்தவர், கவர்ச்சியாக நடிக்க தயார் என்பதாக இணையங்களில் கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். ஆனால் அவருக்கு லைக்குகள் குவிந்ததே தவிர படவாய்ப்புகள் கிடைக்கவில்லை.

ாண்டு
ள்ளார் அமலாபால்.
ணர்வு, அதற்கான
அமைப்பின்

ணைந்தால்
நக்கும் பார்வை
கான - மிக வேகமாக
த அவர்களையும்
வக்கலாம்" என்று
ளார்.





விசுவாசம் படத்தின் பின்னர் அஜித்தை பிரபுதேவா இயக்கவுள்ளார். அண்மையில் அஜித்தை சந்தித்த பிரபுதேவா கதை ஒன்றை சொல்லியிருக்கிறார்.

அந்தக் கதையை அஜித்துக்குப் பிடித்து விட்டதால், ஸ்கிரிப்ட்டை தயாரிக்கச் சொல்லியிருக்கிறார். விசுவாசம் படம் முடிந்ததும் புதிய படம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



தமன்னாவுக்கு தற்போது தமிழில் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. தெலுங்கில் முன்னணி நடிகையாகவே வலம்வரும் அவரின் அடுத்த படம் மே 25 ஆம் திகதி வெளியாகிறது. நகைச்சுவை கலந்த காதல் கதையாக உருவாகும் இந்தப் படத்தில் மீரா என்ற பாத்திரத் தில் நடித்துள்ளார் தமன்னா. இந்தப் பாத்திரம் இளமை அழகு ததும்புவதாக இருக்கும் என தமன்னா கூறியுள்ளார்.




# வரப்பிரசாதம்

தற்போது கிரிக்கெட் உலகில் கணிசமான பந்துவீச்சாளர்கள் முறை தவறிப் பந்து வீசுவதனால் ஐ.சி.சியின் தடைக்கு ஆளாகி வருகின்றார்கள். இந்நிலையில் பாகிஸ்தானில் உள்ள தேசிய அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று பொறியியலாளர்கள் இணைந்து முறை தவறிப் பந்துவீசும் பந்துவீச்சாளர்களுக்கு உதவும் முகமாக புதிய செயலி ஒன்றை உருவாக்கி உள்ளார்கள்.

CricFlex என அழைக்கப்படும் இந்தச் செயலியின் மூலம் குறுகிய நேரத்திலேயே பந்துவீச்சாளர்களின் கை வளைவுகளை மட்டுமல்லாமல் எந்த வேகத்தில், எப்படி பந்தை வீசுகின்றார்கள் என்பதையும் துல்லியமாகப் பரிசோதிக்க முடியும். சஜீட் அஜ்மலுக்குத் தடை விதிக்கப்பட்ட செய்தியே நாம் இந்தச் செயலியை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருந்தது என்கிறார் பொறியியலாளர்களில் ஒருவரான அப்துல்லா அஹமட். பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு உதவும் முகமாகவே அவர்கள் இந்தச் செயலியைக் கண்டு பிடித்தாலும் ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகமும் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது எனலாம்.

முதற்கட்டமாக தமது பரிசோதனை முயற்சியை லாகூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் பரிசோதித்துக் காட்டி உள்ளார்கள். இந்த முயற்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் அங்கீகாரம் அளித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. பந்துவீச்சாளர்களுக்கு வரப்பிரசாதமான இந்தச் செயலியின் விலை 300 அமெரிக்க டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதே பல நாடுகளிலும் இந்தச்செயலிக்கு மவுசு அதிகரித்தாலும் இன்னும் மூன்று மாத காலத்தினுள் இது அவர்களுக்கு வழங்கப்படுமென அப்துல்லா அஹமட் தெரிவித்துள்ளார்.




# நம்பிக்கை நட்சத்திரம்

சென்ற வருடம் லண்டனில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் தடகளத் தொடரில் நடைபெற்ற 100 மீற்றர் போட்டியே உசைன் போல்ட் பங்குபற்றிய இறுதிப் போட்டியாக இருந்தது. இந்தப்போட்டியில் அவருக்கு மூன்றாமிடம் கிடைத்தாலும் 21 வயதான அமெரிக்காவின் கிறிஸ்ரியன் கோல்மன் இரண்டாமிடத்தைப் பெற்றிருந்தார். அப்போதே அடுத்த உசைன் போல்டாக வருவதற்கு அவர் தகுதியானவர் எனக் கணிக்கப்பட்டிருந்தார். அதை நிரூபிப்பதைப் போலவே இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் நடைபெற்ற உலக உள்ளக சம்பியன் ஷிப் தடகளத் தொடரின் 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் 6.34 செக்கன்களில் ஓடி உலக சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கோல்மன் குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் உசைன் போல்ட் ஒரு தனித்த அடையாளமாக விளங்குகின்றார். ஆனாலும் நான் அடுத்த உசைன் போல்டாக இருப்பதை விரும்பவில்லை. மாறாக நான் கிறிஸ்ரியன் கோல்மன் ஆகவே இருக்க ஆசைப்படுகின்றேன். அத்தோடு சில வருடங்களில் அடுத்த கிறிஸ்ரியன் கோல்மன் யார் என்று மக்கள் கேட்பதையே தான் விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த உலக உள்ளக சம்பியன்ஷிப் தடகளத் தொடரில் கலந்து கொண்ட கோல்மன் 60 மீற்றர் ஓட்டப்போட்டியில் 6.37 செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# காலணியில் கை வண்ணம்

மெஸ்ஸியின் தீவிர ரசிகையான பரகுவே நாட்டைச் சேர்ந்த பெண் ஓவியர் ஒருவர் சமீபத்தில் மெஸ்ஸிக்கு ஒரு சோடி உதைபந்தாட்டக் காலணிகளைப் பரிசாக அனுப்பி வைத்துள்ளார். இந்தக் காலணியில் உள்ள விசேட அம்சம் மெஸ்ஸியின் வாழ்க்கையின் முக்கிய சில தருணங்களையும், விளையாட்டுலகின் சில தருணங்களையும் ஓவியமாக வரைந்துள்ளமைதான்.

அந்தவகையில் 25 வயதான லிலியன் கன்ரேறோ என்ற அந்த ஓவியர் "நான் ஏன் மெஸ்ஸியைத் தேர்ந்தெடுத்தேன் என்றால் உதைபந்தாட்ட உலகின் மிகச்சிறந்த வீரர்களில் அவர் ஒருவராவார். 13 வயதில் இருந்தே பார்சிலோனா அணிக்காக விளையாடி வரும் மெஸ்ஸி இந்த நிலையை அடைவதற்காக தனது சிறுபராயத்தையே தியாகம் செய்ய வேண்டி இருந்தது. உதைபந்தாட்டக் காலணிகளில் உருவங்களை வரைந்து வரும் எனக்கு அதில் மெஸ்ஸியின் படத்தை வரையவேண்டும் என்பது நீண்ட நாள் கனவு" என்கிறார்.

இந்தக் காலணியில் மெஸ்ஸி தனது மனைவி அன்ரொனில்லாவின் முகத்தோடு முகம் வைத்திருக்கும் படம், மெஸ்ஸி பிள்ளைகளான தியாகோ, மரியோ ஆகியோர்களை வைத்திருக்கும் படம், மெஸி தனது பாட்டியுடன் இருக்கும் சிறுவயதுப் படம், கோல் அடித்ததும் இரண்டு கைகளையும் மேல் நோக்கி உயர்த்தும் மெஸ்ஸியின் படம் உட்பட சில படங்கள் தத்ரூபமாக வரையப்பட்டுள் ளன.



# புதிய திட்டம்

அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். போட்டிகளை முதன் முறையாக ஒளிபரப்புச் செய்யவுள்ளது ஸ்ரார் தொலைக்காட்சி குழுமம். எனவே இந்த ஒளிபரப்பை எவ்வளவு தூரம் மக்களிடம் கொண்டு சேர்ப்பிக்க முடியுமோ அவ்வளவு தூரம் வித்தியாசமான அணுகுமுறைகளைக் கையாண்டு வருகின்றது.

அந்தவகையில் இம்முறை கிரிக்கெட் ரசிகர்களுக்காக 'Game Plan in Your City' என்றதொரு நிகழ்ச்சியை ஒளிபரப்ப முடிவு செய்துள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்களைக் குறிவைத்தே இந்நிகழ்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது. ஐ.பி. எல். போட்டிகளில் கலந்து கொள்ளும் எட்டு அணிகளின் நகரங்களில் உள்ள ரசிகர்கள் சிலரைத் தெரிவு செய்து தத்தமது அணியின் நிறைகுறைகள் குறித்து ஆராயும் வகையிலேயே இந்நிகழ்ச்சி அமையவுள்ளது.

இந்நிகழ்ச்சியை ஸரார் தொலைக்காட்சியின் Star Sports HD1, Star Sports 1, Star Sports 1 Hindi ஆகிய மூன்று அலைவரிசைகளில் வார இறுதிநாட்களில் கண்டு களிக்க முடியும். இன்று (மார்ச் 10) இரவு 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சியின் முதல் ஒளிபரப்பில் ஹைதராபாத் சண்றைசர்ஸ் அணி ரசிகர்கள் கலந்துகொள்கின்றனர்.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 10.03.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.